திருவள்ளுவர் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை {உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

குடி அரசு

வருட சந்தா உள் நாட்டுக்கு ... ரூ 3—0	வாரப்பதிப்பு.	வியாபாரிகள் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 12.
6 மாத சந்தா ,, ... ரூ 1—12	ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.	கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ஆ. 8
வெளி நாட்டுக்கு ,, ... ரூ 4—0		குறித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்

புஸ்தகம் 4 | ஈரோடு, ... கார்த்திகை 24உ (9—12—28) ஞாயிற்றுக்கிழமை. | எண் 33

R E V O L T

'ரிவோல்ட்'

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு வாரம் ஒரு முறை வெளியாகின்ற ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 4
வெளி நாட்டிக்கு ரூ. 5.

ஆசிரியர்கள்:—

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்
S. ராமநாதன் M. A. B. L.,

விலாசம்:—

மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

R E V O L T

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறுவருஷத்திற்கு சந்தா அனுப்பும் போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்து எழுதக்கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 என்பது சந்தா நம்பர் அல்ல. சந்தாநம்பர் என்பது சந்தாதாரரின் விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்
"குடி அரசு" ஈரோடு.

குறைந்த விலை! குறைந்த விலை!!

இன்னும் ஒரே மாதம் வரையில்!
கீர்த்தி பெற்றதும் இந்தியாவில் ஏராளமாகச் செலவானதுமான



பாக்கெட் டிடக்டிவ்
அல்லது
வீ பார்க் ராஸ் கோப்.

என்னும் நூதன அமெரிக்கக்கருவியை அசலுக்கும் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம்.

இக்கருவியினால் திரும்பிப்பாராமலேயே உங்கள் பின்னே நடப்பதைத் தெரிந்து கொள்ளலாம். உமது காதலியின் செய்கைகளை அவள் தெரிந்து கொள்ளாமலேயே அறிந்துகொள்ளலாம். ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. இத்துடன் நான்கு லீலா விநோத பிரஞ்சு போட்டோக்கள் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

ஒரு கருவியின் குறைந்த விலை ரூ. 1—4—0. ஏககாலத்தில் உள்நாட்டிலிருந்து இரண்டு கருவிகள் தருவித்தால் தபால் செலவில்லை.

தி. பான்வி வாட்சு ஹவுஸ், மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

'திராவிடன்'

தினப்பதிப்பு சந்தா விபரம்.

ஒருமாதத்துக்கு	ரூ. 1—6—0
தலை ஆபீஸ் இடம் தவிர்ந்த உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு	,, 1—0—0
தனிப்பிரதி	0—0—6
வெளி நாட்டிக்கு வருஷம் ஒன்றுக்கு	,, 18—0—0

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

உங்களுடைய சஞ்சலம் ஒழிந்தது

"சௌரியா,,
ஓர் வரப்பிரசாதம்

சகோதரிகளே, இனி நீங்கள் சோர்வடைய வேண்டியதில்லை. உடனே எழுங்கள். சூதகவலி மாதவிடாய் காலத்திய வயிற்றுவலி, முதலிய எல்லாவியாதிகளையும் தீர்த்து புத்திர பாக்கியத்தையும் சௌகரியத்தையும் தரவல்லது.

ஒரு புட்டியின் விலை ரூ 3—0—0 கேட்லாக் இனாம்

Apply to— சங்கராராம் மெடிகல் ஹால், குகை, சேலம். (S. I. R.)

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஆம் ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார், இஞ்சினியரிங் ஒர்க்ஸ்
மைலாப்பூர், மதராஸ்.

திருப்பூர் பனியன்ஸ்,

அழகாயும் உறுதியாயும் நீடித்து உழைக்கக்கூடியதாயும் உள்ள பனியன்கள் நம்மிடம் கிடைக்கும்.

32 இஞ்சு டஜன் 1-க்கு 4—8—0

வேண்டியவற்றிற்கு உடனே ஆர்டர் செய்யுங்கள்.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

பிளாக்குகள்.

புத்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கும், லேபில்களுக்கும், இன்னும் இதுபோன்ற வேலைகளுக்கும் வேண்டிய சகலவிதமான

லைன், ஹாப்டோன்,
கலர்பிளாக்குகள்

35 வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்கப்படுவது

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.

கொஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகுவாய் குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்லாக் இனாம்.

ஜான் பிரான்சீஸ், சொந்தக்காரர்
பாஸ் டியன் ஸ்டுடியோ
173, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை.

எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

டேபில் டைம்பீஸ் இனாம்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்கும் நபர்களுக்கு மேஜையின் டேபில்வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முக்தாங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்,

ஜினோன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.

அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேடலாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் - 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
நெர்சரி தோட்டம், சேலம்.

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத
"ஆனந்தகுணபோதினி"
ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக
3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு
பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

ஆநுபவ ஞானபோதினியில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜாலிபோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆனந்த தீபம் என்று என்னலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான்; இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷசந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

சி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

மூட்டமணிகள்

அன்பர்களே!

நீங்கள் கொடுக்கும் காசுக்கு மண்டலக்கணக்கல்ல மாதக்கணக்கல்ல மணிக்கணக்கல்ல அந்த க்ஷணமே கைமேல் பலன்.

ஒரு மணி:- மூட்டைப்பூச்சிகளுக்கு எமன். எந்த சந்துகளில் ஆயிரக்கணக்கான மூட்டைப்பூச்சிகள் குடியிருந்துகொண்டு இரவு பகல் குழந்தைகள் முதல் யாவருடைய ஜீவனையும் உறிஞ்சும் கொடிய பூச்சிகளுள்ள இடங்களில் இந்த மருந்துபட்ட க்ஷணமே அவ்வளவும் சாகிறது

2 அவு. பாட்டல் 1க்கு ரூ 1—0—0

மறு மணி:- சர்வதேள் விஷத்திற்கும் எமன், உச்சலிங்கத்தேள் வாதத்தேள் பித்தத்தேள் சிலேஷ்மத்தேள் நண்டுவாய்க்காலி இவைகள் கடித்தவிடத்தில் கோட்டையில் கண்டபடி கடிவாயில் மருந்தைப் போட்டு உடன் புகையைப் பிடிக்க அந்த க்ஷணமே எப்பேர்ப்பட்ட தேள்களின் விஷமும் ஓடுவதைப்பார்க்கலாம் தேள் கொட்டின விடத்தில் வீக்கம், மேல்சுவாசம், அறிவு நீங்குதல், வாந்தி முதலிய வைகளை தடுக்கும். விபரங்கள் அடங்கிய நோட்டீசும் மருந்துடன் வரும்.

3 பாட்டல் ரூ 1—0—0

மும்மணி:- சஞ்சீவிப்புகை வருஷக்கணக்காயிருக்கும் எவ்வித தலைவலிக்கும் புடனி இடுப்பு சரீரத்தில் எவ்வித வலிக்கும் இந்தப்புகையைப் பிடித்தால் அந்தப்பொல்லா வேதனை நீங்கும் விவசாயிகள், வியாபாரிகள், தொழிலாளிகள் உத்தியோகஸ்தர்கள் முதலிய அதிகவேலையுள்ள கனவான்களை தட்டிஎழுப்பி ஜரூராய் வேலைகளை பார்க்கச்செய்கிறது. இரி 2 க்கு ரூ 1—0—0

எல்லா விபரங்களும் மருந்துடன் வருகிறது.

க. வெ. வேலுமயில், மயிலர் திருமாளிகை,
காங்கயம், தென் இந்தியா

ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரி காப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311.
தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

மதனகாமம்.

(புதுச்சேரி பதிப்பு.)

மதன விஷயங்களை விளக்கமாய் எடுத்துரைக்கும் நூல்களில் இப்புத்தகமே முதன்மை வாய்ந்தது. அதில் அநேக கொக்கோகச் சக்கரங்களும் மானிடலீலை மர்மங்களும் அடங்கியிருக்கின்றன. இன்ப ரகசியங்களை தெளிவாயும், விரிவாயும் எழுதுவதில் பெயர் பெற்ற பிரஞ்சிந்தியாவே முதன்மை வாய்ந்த தென்பது யாம் கூறாமலே நண்பர்கள் அறிவார்களாகையால் இதிலுள்ள விஷயங்களை கூறாது விடுத்தனம். விலை ரூ. 1—0—0.
வஸந்த நிலையம். ரங்கப்பிள்ளை வீதி புதுச்சேரி.

கடவுளை வணங்க
பார்ப்பனத் தரகர்வேண்டுமோ?

பண்டிதர்களுக்குப் பகை அவர்கள் படிப்பே யன்றி "குடி அரசு" அல்ல.

(5-ம் கட்டுரை)

கைவல்ய சாமியார் எழுதுவது.

சாஸ்திரங்களின் மாறுபாட்டிலும்சமூகக்கொடுமையிலும் பண்டிதர்கள் கருத்தைச் செலுத்த வேண்டு மென்பதே எங்கள் கருத்து. தனிமனிதன் கோப தாபங்களின் சமயத்திலும் யோசனை பண்ணுவதுண்டு. ஆனால் ஒரு கூட்டத்தின் உணர்ச்சியுடன் கலக்கும் போது யோசனை செயவதில்லை. அவனுடைய தர்மப்புலன் மழுங்கிப் போகிறது. அந்த இடத்தில் பண்டிதத்திறமை நசுக்குண்டு போகாமலிருக்க வேண்டு மென்பதே எங்கள் கோரிக்கை.

சைவப் பண்டிதத் திறமையில் "பேர் போனவர்" "யாரும் வராத ஐந்தாம் பிரகாரத்திலிருந்து கோபுரத்தை அண்ணாந்து பஞ்சமர்கள் பார்த்துக் கொள்ள வேண்டுமே யொழிய கோவிலுக்குள் வருவதற்கு நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்" என்று சொன்னது அநேகருக்குத்தெரியும். இவரது ஆகமப் படிப்பும் ஆராய்ச்சித்திறமும் கூட்டுத் தொகுதியின் குருட்டுக் கொடுமைக்கு ஆளானால் மற்ற பண்டிதர்களின் படிப்பில் சந்தேகப் படாமல எப்படியிருப்பது? அவர் சொல்லுவதை இன்னும் சில பெரிய பண்டிதர்களும் ஆமோதிக்கத்தானே செய்தார்கள். மலையாள தேசத்தில் வரும் ஓணப்பண்டிகையில், ஜெம்மி, என்னப்பட்ட நம்பூதிரிப்பாப்பானை, அவனது பூமி உழுது பயிர் செய்யும் குடிகளில் "தாழ்ந்த ஜாதிக்காரர்" களும் மற்ற மஸ்தர்களும் பார்க்கப் போனால், பண்டிகை தினத்தன்று இவர்களைப் பார்க்கப் படாதென்று ஷை நம்பூதிரிப் பார்ப்பனர்கள் தங்கள் காலைக் காட்டி "இதைப்பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லுவார்களாம். அதுபோல "பஞ்சமர்கள் கோபுரத்தில் என்னைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சுவாமி வேத ஆகமங்களில் சொல்லியிருப்பதாக பண்டிதர்கள் நினைக்கிறார்கள். சுவாமி வேதாசலம் முதற் கொண்டு அகச்சான்று வேண்டு மென்கிற எல்லாத் தமிழ்ப் பண்டிதர்களையும் நிலைநிறுத்த வந்த ஆதி சைவப் பண்டிதன் எழுதியிருக்கும் புஸ்தகத்திலிருக்கும் ஒன்றைக் கீழே எழுதுகிறேன்.

"அத்வைதிக மகாவாதி, வேதாந்த மகாவாதி, யோகான்ம வாதி, பிரதி பிம்ப மகாவாதி, பிரசன்ன பௌத்த மகாவாதி, பரிணாமமகாவாதி, கிடா பிர்ம மகாவாதி, மாயாமகாவாதி, சுரா மாம்சபுக்த மகாவாதி, நிர்மூலதர்ம மகாவாதி, அக்னிதெய்வ தாத்மகவிசேஷயகாவாதி, மித்தியா மகாவாதி, இவ்வாறன்ன மதங்களின் பிராமணர்களான விஷேத முடைய இவர் பிராமணரென்றும்சொல்லெங்கணுமொருங்கேபற்றி தன்தலைமேலேந்தி மகிழ்வுறவிரும்பியது சாலச்சிரிப்புடைத்தே. இவர்கள் இவ்வசப்பிய வாதப் படு குழிவீழ்ந்து சத்தளித்து மீளா நரகிற்காளாய் வாணாளை வீணாளாய் போக்கும் தீய நெறியுடையார் வேதார்த்தமாகிய சிவாகமத்தை உற்று நோக்கி நல்லாங்கைப் பற்றாது வேதப்பிராமணர் போல் தன் தலை நீட்டி நிர்மூலமான மன்வாதி ஸ்மிருதிகளை வேதார்த்தமென மயக்குற்று இவ்வேத விருத்தார்ச்சார படுகுழி வீழ்ந்து ஜீவஹிம்சை நிறைந்த யாகாதி ருதுக்களை சத்காரியமென கைப்பற்றி கள்ளும் பூசிக்கவிரும்பும் இக்கேவல தந்திர பிரவிஷ்டர்களை சூத்திரரிலும் கடையாய் ஒதுக்கவன்றோ வேதாமங்கள்விதித்திருக்கின்றன."

இதில் ஆகமங்களும் சூத்திரனைக் கடையனாக ஒதுக்கியிருப்பதும் எந்த மதவாதிப் பாப்பானும் சைவமதஸ்தனாகி விட்டால், பாப்பான் பார்ப்பானே என்பதும் எத்தனை படித்த பண்டிதனானாலும் எவ்வளவு சைவப்பற்றுடையவனானாலும் தமிழன் சூத்திரனே என்பதுமான ஆதிசைவப் பாப்பானின் மனோபாவமும் இதில் விளங்குகிறது. பாப்பானின் மதச்சண்டை எல்லாம் 'நீ பாப்பானா நான்பாப்பானா' என்கிற சண்டையானாலும் அதுஒருவன் கொள்கையை இன்னொருவன் ஒத்துக்கொள்ளும் வரையிலும் தான். பின்எல்லாரும் பாப்பார்கள்தான். நாம்எந்தப்பாப்பான் கொள்கையைத் தலைமேல் தாங்கினாலும் கடையான சூத்திரன் தான்.

கடவுள் சந்நிதிக்கு அந்தக் கடவுளைச் சேர்ந்த பக்தியுடையவர்கள் யார் வந்தாலும் அங்கீகரிப்பதே ஞாயமாக விருக்க, நம் நாட்டில் சிலர் நீக்கப்படுவதற்கும் எக்காலமும் நீக்கப் பட்டிருப்பதற்கும் காரண மென்ன? 'தில்லைவாழ் அந்தணருக்கு அடியேன்' என்று கடவுள் சொன்னது போல 'சிலர் தவிர பிறரை விடாதே' என்று சொல்லியிருக்கிறாரா? அல்லது சாஸ்திரங்கள் சொல்லுகிறதா? அல்லது மனிதனை மனிதன் அவமானப்படுத்திக் கொடுமை செய்வதற்குநாமாக வற்படுத்திக் கொண்டதா? பண்டிதனைக்கேட்டால் சாஸ்திர மென்கிறான். சாஸ்திரத்தைக் கேட்டால், பண்டிதன் என்னிடம் சொன்னான் என்கிறது. பண்டிதனையும சாஸ்திரத்தையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கேட்டால், இது ஆசாரிகள் சொன்னது, ரிஷிகள் கண்டுபிடித்தது என்கிறார்கள் "ஜாதியில் பெரிய ஜாதி என்னும் பார்ப்பார ஜாதியில் பெரியஜாதி என்னும்நம் பூசரிப் பாப்பான்ஜாதியில்பிறந்தவரும்,மதத்தில்பெரியது என்னும் தத்துவமதத்தை உடையவருமான சங்கராச்சாரிக்கு, சிவத்தில் பெரியது என்னும் காசி சிவனிலும் பெரியசிவம் என்னும் விஸ்வநாத சிவம் பறையனாக வந்து ஆசாரிக்கு உபதேசம் செய்ததாகவும், ரிஷிகள் புலைச்சிக்கும் பறைச்சிக்கும் மீன் வாணிச்சிக்கும் பிறந்ததாகவும் சாஸ்திரங்கள் சொல்லுகிறதே, அது ஒப்பு இல்லையோ"? என்றால் "ஒப்பு தான், வழக்கத்திலில்லை; அதுவுமல்லாமல் மதுமாம்சமருந்துகிறார்கள்." என்கிறார்கள்.

நீங்கள் காலையிலிருந்து எழுந்துபொட்லர்களை கண்டு அவனைத் தழுவி அவன் ஆசீர்வாதம் பெறுவது எத்தனை காலத்து வழக்கம்? வழக்கமில்லாததை நீங்கள் வழங்கிக் கொள்ளவில்லையா? அதுபோலவே வழக்க மில்லாமலே சுவாமி ஆசீர்வாதத்தையும் அவர்கள் பெற்றுக் கொண்டு போகட்டுமே. துரையின்கிருபைக்குபொட்லர்களின் ஆசீர்வாதம் உங்களுக்கு வேண்டும், கடவுள்கிருபைக்கு பொட்லர்களை நீங்களும் ஆசீர்வதியுங்கள். அவர்கள் தயவை உங்களுக்குக் காட்டுவது போல் நீங்களும் காட்டுங்கள். நீங்கள் அவர்களுக்குக்கொடுக்கும் சிறு தொகையைப் போல அவர்களும் உண்டிகையில் சிறிது பணம் போடுவார்கள்; கோயிலுக்குள் மின்சார விளக்கு காஸ்லயிட்டு முதலியவை ஏற்றுவது பழய வழக்கமா? ஆப்பிள் ஆரஞ்சியை நம் சாமி முன் கண்டதுண்டா? பணக்காரனுக்கு குருக்கள் கொடுக்கும் சாமி பிரசாதம் ஆப்பிள், ஆரஞ்சாகவல்லவோ இருக்கிறது. இப்படி எத்தனையோ புது வழக்கம் வந்து புகுந்து போயிருக்கையில், வழக்கத்தில் இல்லைஎன்று சொல்லுவது ஞாயமில்லை. பின் மதுமாம்சம் தின்பதைப் பற்றி கவனிக்க வேண்டியது தான். கள்ளில்லாவிட்டால் சுவாமிக்குக் கோவிலில வேலை அதிகமேயில்லை, கள்ளுக்கு விட்ட சுவாமி மாத்தையும் தினம்கோவிலிலிருந்து போகும்கள்ளுக்குடங்களையும் யார் பார்த்துக் கொண்டிருப்பது? கள்ளு சுவாமிக்கு உதவாதென்றால் கோவிலுக்குப் பக்கமிருக்கும் கள்ளுக்கடைக்குத்தகை ஏன் உயர வேண்டும்? கோழிச்சூப்பும் இங்கிலீஷ் சாராயமும் பெருமாளுக்கு சுக்கு கஷாயத்திற்கு வரவில்லையே ஒழிய மற்ற உள்பிரகார மெல்லாம் ஒத்துக் கொண்டாய் விட்டது. எருமைக்கிடா பலி கொடுப்பது சில கோவில்களில்நடப்பதாகத் தெரிகிறது. பிள்ளைக்கறிவரையிலும்தின்றுபழகின சாமிக்கு எந்த கறியால் கோபம் வரும்? கோவில் கட்டின ராஜாக்களும் அதற்கு மானியம் விட்ட ஜெமீன்தார்களும் நாட்டு மாம்சம் தின்னாமல் காட்டு மாடு தின்றவர்களா? வயிற்றுக்கும் வைத்தியத்திற்கும் மாம்சம் தின்பதின் பலனுக்கும் வரும் பாவத்துக்கும் வித்தியாச மென்ன? என்று கேட்கின்றோம்.

காசிக்குச் சங்கராச்சாரியார் போயிருந்தார். மலையாளத்து நம்பூதிரிப் பார்ப்பானானதினால் தீட்டு என்னும் அஞ்ஞானம் தீரவில்லை. எல்லா சிவத்திற்கும் ஆதி பீடமான காசி விஸ்வநாத சிவன் ஒரு பறையனாக அவர் முன் தோன்றினார். பறையனைக் கண்டவுடன் "என்னைத் தீட்டாக்கி விடாதே, விலகிப்போ" என்றார்சங்கரர். அதைக் கேட்ட விஸ்வநாதப் பறையர் "எதைப்பற்றி என்னை விலகச் சொல்கிறாய்? உனக்கும் காமமும் கோபமும் லோபமும் பயமும் சோகமும் சிந்தையும் பசியும் சிரமமும் உண்டாகின்றன. வேர்வையையும் மூத்திரத்தையும் மலத்தையும் சிலேஷ்மத்தையும் பித்தத்தையும் உதிரத்தையும் எல்லா சரீரமும் பெருகச்செய்கின்றன, அப்படியிருக்கஎதைக் கொண்டு என்னை விலகச் சொன்னாய்? நீ அறிவில்லாமல் ஏன் மோகமடைகின்றாய்? உன்னைப்பற்றி சோகப்படக்கூடிய நீ ஏன் மற்றொன்றைப் பற்றி சோகப்படுகிறாய்? நீயும் நானும் உன்னைச்சுற்றி நான்கு புறத்திலும் உள்ளவர்களுமான அனைவரும் எங்கிருந்து வந்தோமோ அந்தவிடத்திற்கே செல்வோம். சம்சாரத்திற்குக் காரணமானதும் முத்திக்குக் காரணமானதுமான வழிகளையறிந்து தெய்வம் ஆசுரம் என்ற ஸ்வபாவங்களிலிருந்து வெளிப்பட்டு, பிறப்பு இறப்புகளை அறிந்தவன் எவனோ அவனே சோகமென்னும் தீட்டில்லாதவன்- சோகமும் பயமும் கோபமும் சிரமமும் எதைக் காரணமாகக் கொண்டு உண்டாகின்றனவோ அது உன்னுடைய அங்கங்களில் ஒன்றானாலும் அதை விலக்க வேண்டுமே ஒழிய என்னிடம் தீட்டு இருப்பதாக நீ நினைக்கும் மோகத்தால் உன் மனம் அசுத்தமடையும். ஆனதால் அறிவுள்ளவன் நான் சொல்லும் இந்த புத்தியையடைந்து பரிசுத்தமான மனதுடன் ஸஞ்சரிக்க வேண்டும்" என்று சொல்லிப் போனார். உடனே சங்கரருக்கு அஞ்ஞானம் நீங்கி அறிவின் உதயம் உண்டாகி "ஆசமாவையும் அதன் ஆதிக்கத்தின் முடிவின் காரிய காரணங்களையும் எவன் காணவில்லையோ அவனே சண்டாளன்" என்று ஐந்து சுலோகம் சொன்னார்.

அதைப் படித்தவர்களும், சுலோகம் பாடமுள்ளவர்களும், சங்கரருக்குச் சிஷியர்களும், பாத காணிக்கை கொடுப்பவர்களும், அதற்காகப் பல பேரைக் கட்டுப்படுத்தி மடத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பவர்களும், காசிக்குப் போவோரும், காசி விஸ்வநாதரைக் கட்டித் தழுவுவோரும், அவர் தீர்த்தத்தை சாகும் போது சிறிது குடித்தும் வாயில் வழிந்தோடியும் மோக்ஷத்திற்குப் போவோரும், பக்தியோடு மோக்ஷத்திற்கு அனுப்புவோரும், தீர்த்தப் பார்சல் தந்தி தபால் எழுதுவோருமாக எத்தனையோ பேர்கள் இருக்கிறார்களே ஒழிய சங்கரருக்கு விஸ்வநாத சுவாமி செய்த உபதேசமும் அவருக்கு வந்த ஞானத்தையும் நம்புகிறவர்கள் எத்தினை பேர்கள்? வெள்ளியங்கிரி என்று சொல்லப்படும் பனியுறைந்த இமயகிரியின் உச்சியிலிருந்து மூவாயிரம் வீட்டு தீக்ஷதர்களையும் கைபர் கணவாயின் வழியாகக் கூட்டிக் கொண்டு

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

இதிகாசங்கள்.

இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(7-ம் கட்டுரை)

திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்

இராமனை உடனே அழைத்து வரும்படி தசரதனாலே ஏவப்பெற்ற சுமந்திரன் பல தெருக்களையும் கடந்து இராமனுடைய அரண்மனையை யடைந்து காவலுள்ள பல கட்டுக்களையும் கடந்து உட்கட்டிற் புகுந்தான். அங்கேயும் பல இளமையான வீரர்கள் காவல் புரிந்தனர். அங்கே தொண்ணூற்றைந்து வயதுக்கு மேற்பட்ட சில கிழவர்களும் கையிற் பிரம்பேந்தி நின்றனர். இராமன் தன் தந்தையின் அரண்மனையில் உண்டிமுடித்துக்கொண்டு திரும்பிவந்தவுடன் அவனை அக்கிழவர்கள் தமது மடியில் வைத்துக்கொண்டு உச்சிநுகர்ந்து மார்புறத் தழுவிப் போகச் சொல்லுவார்கள். அதனால் இராமனுடைய உடலிலிருந்த குங்குமப்பூக்களாலும், கஸ்தூரி முதலிய நறுமணங்களாலும் அவர்களுடைய உடல் பூசப்பட்டிருந்தது.

சுமந்திரன் விடைபெற்று உட்சென்று இராமனைக் கண்டு, வந்த செய்தியைக் கூறினான். இராமனுடைய உடம்பில் குங்குமம் கலந்து பன்றியினுடைய இரத்தம் போல் சிவந்த சந்தனம் பூசப்பட்டிருந்தது. இராமன் சீதையைப் பார்த்து "எனது சிறிய தாய் எனக்கு மிகவும் வேண்டியவள். ஆதலின் என் தந்தையும் அவளும் எனது முடி சூட்டை அவசரப்படுத்தியிருப்பர். ஆதலால் நான் போய் வருகிறேன்" என்று கூறி அவளுடைய பாதங்களைத் தொட்டு அவளைச் சமாதானப் படுத்திச் சென்றான். சீதையும் சிறிது தூரம் பின் சென்று வாழ்த்தினள். இலக்குவன் இராமனுக்குக் காவல் செய்து சென்றான்.

கைகேயியின் அரண்மனையை யடைந்து இராமன் உள்ளே சென்று தசரதன் வாடின முகத்துடன் படுத்திருப்பதையும் கைகேயி பக்கத்தில் நிற்பதையும் கண்டு இருவரையும் தனித்தனி வணங்கினான். தசரதன் 'இராமா' என்று ஒருமுறை கூப்பிட்டான். பின் கவலையால் நீர் பெருகிய கண்களுடன் பேசமுடியாமலிருந்தான். அத்துயரத்திற்குத் தான் காரணமாயிருக்கலாமோ என்று இராமன் சந்தேகித்தான். அக்கவலை தன்னால் நேர்ந்திருக்கலாமென்றே எண்ணி இராமன் கைகேயியை நோக்கி "அம்மா! நான் ஏதேனும் குற்றம் செய்தேனோ? அன்றி அவருக்கு நோயோ! அல்லது தாங்கள் ஏதாவது கடுமையாகப்பேசி வருத்தமுண்டாக்கினீரோ? உண்மையைக்கூறும்" என்று கேட்டான். கைகேயி "இராமா! அவர் உன்னிடத்தில் ஏதோ சொல்ல விரும்புகிறார். ஒரு வேளை நீ கேட்கமாட்டாயோ என்ற அச்சத்தால் கலங்குகிறார். இவர் எனக்கு வாக்குறுதி செய்து தயங்குகிறார். அது நன்மையோ தீமையோ, அப்படியே நடக்கிறேனென்று நீ வாக்குறுதி செய்தால் உன்னிடம் அவருக்குப் பதிலாக நானே சொல்லுகிறேன்" என்றாள். இராமன் தன் மேல் அவ்வாறு ஐயமுற்றதற்காக வருந்தி எதைச் சொன்னாலும் கேட்பதாக வாக்குறுதி செய்தான். உடனே கைகேயி "நான் கேட்ட இரண்டு வரங்களால் பரதன் நாடாளவும் நீ பதினான்காண்டு காடாளவும் உனது தந்தை வாக்குறுதி செய்திருக்கிறார். நீயும் இப்போது செய்த வாக்குறுதிப்படி உடனே காட்டுக்குப்போ. இதை உன் தந்தை உன்னிடம் சொல்லமாட்டாமல் தயங்குகிறார்" என்று கூறினாள். தசரதன் தன் கண்முன்னாலேயே இக்கொடிய சொல்லைக்கேட்டுத் தவித்தான்.

அது கேட்ட இராமன் "அம்மா! அப்படியே ஆகட்டும். ஆனால் ஒன்று மட்டும் என் மனதைப் புண்படுத்துகிறது. பரதனுக்கு முடிசூட்டவேண்டியதைப்பற்றி அவர் ஏன் என்னிடம் சொல்லவில்லை. எனக்கு வருத்த முண்டாகு மென்று சொல்லவில்லை யென்றால் பரதன் என் தம்பியல்லவா? சீதையை நான் மணம் செய்யும்போது அவளைத் தனக்கு வேண்டுமென்று அவன் கேட்டாலும் உடனே கொடுப்பேனே. இவ்வரசாட்சி எனக்கு ஒரு பொருட்டா? பரதன் நாடாளட்டும். நான் காடேகுகிறேன்" என்று புகன்றான். கைகேயி அவனை உடனே காடேக அவசரப்படுத்தி "உன் தந்தை வெட்கத்தால் உன்னோடு பேசவில்லை. நீ காடேகினொழிய அவர் குளிப்பதுமில்லை, உண்பதுமில்லை" என்றாள். அதைக்கேட்ட தசரதன் 'என்ன அநியாயம்' என்று கூவிமூர்ச்சித்து விழுந்தான். இராமன் ஓடி அவனை யெடுத்தான். இராமன் "அம்மா! முடிகளை என்வசப்படுத்தி அரசாளுமியல எனக்கு எண்ணமில்லை. அவ்வாறு தாங்கள் வருந்த வேண்டாம். நான் தாமதித்திருந்தால் ஒரு வேளை பரதன் எனக்கு அரசைக் கொடுத்து விடுவானோ என்று அஞ்சுகிறீரோ? நீங்களே என்னிடம் கட்டளையிட்டால் உடனே போகேனோ? இந்த அற்பமான காரியத்தை தாம் அரசரிடம் கேட்கவும் வேண்டுமோ? இதோ என் தாயிடமும் சீதையிடமும் விடைபெற்றுப்போகிறேன். அது வரை தாமதியும்" என்று கூறி அவளையும் தசரதனையும் வணங்கிச் சென்றான். தசரதன் வாய்விட்டலறினான். இராமன் துக்கத்தை வெளிக்காட்டினால் தன் நண்பர் வருந்துவாராதலால் அடக்கிக்கொண்டு வெளியே வந்தான். அப்போது அங்கிருந்த பெண்கள் யாவரும் "இந்த இராமனை காட்டுக்கனுப்பி மிகுந்த துக்கத்தை உலகுக்கு உண்டாக்கப் போகிறார் அரசு" என்று வாய்விட்டுக் கதறி தசரதனை நிந்தித்தார்கள். இக்கூக்குரல் தசரதனுடைய காதில் விழ அவன் வெட்கமும் துக்கமும் கொண்டு மூர்ச்சித்தான். அக்கூக்குரலைக் கேட்ட இராமன் பெருமூச்சு விட்டுக்கொண்டு போய் இலக்குவன் பின் தொடர்ந்துவரக் கோசலையின் அரண்மனையையடைந்தான். இவ்வாலாற்றை ஆராய்வோம்.

சுமந்திரனுடைய இழி குணத்தையும் செயலையும் பெண்வழிப்பட்ட தசரதன் கண்டித்தமையை முன் கட்டுரையிற் கண்டோம். தசரதன் இராமனை அந்தரங்கமாக அழைத்து அவனுக்கு மிகவும் வேண்டியவர் இரவு முழுதும் சாக்கிரதையாகக் காவல் புரியச் சொல்லியதையும் அதன்படி சகோதர வஞ்சகனாகிய இராமனும் தனக்குற்ற நண்பர்களையழைத்துப் பேசியிருந்ததையும் முன் கட்டுரையிற் கண்டோம். அதன்படியே அவன் மிகவும் வேண்டியவர்களாலே காவல் புரியப்பெற்றிருந்ததைச் சுமந்திரன் காண்கிறான். காவல் வீரரோடும் சில கிழவர்களும் இருந்தார்களாம். அவர்கள் இராமனை மார்போடணைத்து மடி மேல் வைப்பார்களாம். இராமன் பால்குடி மறவாத பிள்ளையல்லவா! அவனை அவ்வாறுதான் செய்தல் வேண்டும். என்னே அநியாயம்! சீதையை மணம் செய்து முடிசூட்டுக்கு தயாராக இருந்ததோடு பல தாரங்களோடு கூடி மகிழ்ந்திருந்த முழு ஆண்மகனாகிய இராமனை கிழவர்கள் மார்போடணைப்பதாம்! மடிமீதிருத்துவதாம்! என்னே விந்தை! அதனால் இராமன் மேலிருந்த வாசனைப்பூச்சுக்களெல்லாம் அக்கிழவர்கள் மேல் ஒட்டுவதாம்! அவன் ஒவ்வொரு நாளும் அவனுடைய தந்தையாகிய தசரதனிடம் போய் உண்டி முடித்து வாசனை பூசித் திரும்பும்போதெல்லாம் இக்கிழவர்கள் இச்செயல் புரிவார்களாம்! இவ்விழி செயலுக்கு இராமனும் உட்பட்டிருந்தனனாம்! அநியாயம், அநியாயம்! இவ்விதமான இழி செயல் புரிந்தே தசரதனும் இராமனிடம் மயங்கி அவனை எப்போதும் தன் பக்கத்திலேயே வைத்துப் பார்க்கவேண்டுமென்கிறானென்று நாம்முன் கட்டுரையில் விவரித்த உண்மைகளை மேலே குறித்துள்ள உண்மைகள் நன்கு வலியுறுத்தப் போதிய சான்றுகளாகின்றன.

இராமனுடைய மார்பிலேயே பூசப்பெற்றிருந்த செஞ்சந்தனத்துக்கு உவமையாகப் பன்றியின் இரத்தத்தை வால்மீகி கூறுகிறார். இவ்வால்மீகியின் இழிந்தமனப்பான்மைதானென்னே! சிவந்த நிறத்துக்கு உவமைகூறப் பன்றியிரத்தந்தான் சிறந்த உவமையாகும் போலும்!!

தன்னை விட்டுப் பிரிய மனமில்லாதவளாகிய சீதையை அவளுடைய கால்களைத் தொட்டு இராமன் சமாதானம் செய்தனனாம். என்னே விந்தை! கணவன் மனைவியிடம் விடை பெறும்போது ஆரியர்களுடைய முறை இதுதான் போலும்! இவ்விதமான ஒழுக்கங்களைத் தற்கால உலகம் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம், அவசியம். இதனால் தசரதன் கைகேசியைப் பலமுறை பணிவுடன் அவள் காலைத் தொட்டு வேண்டுவதாகக் கூறியதும் ஓர் முறை அவள் காலில் வீழ்ந்ததும் வியப்பிற் கிடமானவை அல்ல. ஏனெனில் இவ்வாறு மனைவியின் காலைச் சாதாரணமாக விடைபெறும் போதே தொட்டு வேண்டி விடைபெறுவது அவ்வாரிய வகுப்பினரின் இயற்கையாக இருக்கிறது. என்னே இவர் தம் நாகரிகம்!!

இவ்வாரம் புரோகிதத்தையும் பார்ப்பனீயத்தையும் ஒழித்த வீரர்கள்.

திருவாளர்கள்.

1. மா. சொக்கலிங்கம்,
 'குடி அரசு' சந்தாதாரர்,
 மூலக்கரைப்பட்டி.
2. சிதம்பரம் செட்டியார்,
 உண்மை விநாயகர் சபை,
 கீழ்த்தட்டப்பாறை.
3. லக்ஷ்மியம்மாள்,
 சிறு குடி,
 மேலூர் தாலூகா.
4. சி. முத்திருவாண்டி செட்டியார்,
 பொன்னகரம்,
 மதுரை.
5. ருத்ரபதி தேவர்,
 கிராம முன்சீப்,
 கலைநாயர்.
6. அ. ரு. சாமிநாத பிள்ளை,
 திருவீழிமிழலை,
 நன்னிலம் தாலூகா.
7. சி. பா. சுந்தரம் செட்டியார்,
 இரும்பு வியாபாரம்,
 சத்தியமங்கலம்.
8. டி. கிருஷ்ணசாமி உடையார்,
 கிராம முன்சீப்,
 நீலமங்கலம்.
9. P. L. P. K. M. காரியஸ்தர்,
 மு. கருப்பையா பிள்ளை,
 பக்கோ.
10. க்ரு. பெரி. பெரியையா,
 சிங்கம் புணரி,
 ராமநாதபுரம் ஜில்லா.
11. திரு. ரும. சோலைபழநி பிள்ளை,
 சிறு குடி,
 மேலூர் தாலூகா.

நாடார்களும், திரு. நாயக்கரும்.

"நாடார் குலமித்திரன்" எழுதுவது.

"விருதுநகரில் 22-11-28-ல் இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் திரு. சௌந்தரபாண்டிய நாடார், எம். எல். ஸி. அவர்களுக்கு உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தபோது, அவண் விஜயஞ் செய்திருந்த வைக்கம் வீரர்—திரு. நாயக்கரவர்கள் கூட்டத்தின் தலைவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சிறிது நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அது சமயம் திரு. நாடார் தலைவர் பதவி பெற்றது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வான் பொருட்டாயிருத்தல் வேண்டுமென்று வற்புறுத்திப் பேசுங்கால் நாடார்களும் தாழ்த்தப்பட்டவர்களுள் அகப்பட்டவர்கள் என்று கருத்தடங்கிய வார்த்தைகளை உபயோகித்தார். பின்னும், தாழ்த்தப்பட்ட மக்களின் கஷ்டங்களை அறவே ஒழிக்க திரு. நாடார் திரிகரண சுத்தியுடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் பேசினார். திரு. நாயக்கர் உள்ளுணர்ச்சியுடன் வெகு உருக்கமாகப் பேசிய விஷயங்களைக் கேட்டிருந்த நாடார் பெருமக்களும் நாடாரல்லாத பல கனவான்களும் வெகு அமைதியுடன் கேட்டுக்கொண்டிருந்ததுடன், இடை இடையே தங்களுடைய சந்தோஷத்தைக் கரகோஷ மூலம் காட்டிக்கொண்டிருந்தார்கள். ஆனால் பின் பக்கமாக விருந்த சில நண்பர்கள் நாடார்கள் தாழ்த்தப்பட்டவர்களா? என்று முணுமுணுத்தார்கள். ஆனால் திரு. நாயக்கரிடம் ஒன்றும் கேட்கவில்லை. கேட்டிருந்தால் பதில் சொல்லியிருப்பார்"

என ஒரு நண்பர் எழுதி, நாடார்களைத் தாழ்த்தப்பட்டவர்களாக-தாழ்ந்தவர்களாக திரு. நாயக்கர் பேசியது சரிதானென்று நம்மைக் கேட்டுவிட்டு, சமாதானம் பத்திரிகை வாயிலாக வரவேண்டுமென்று எழுதியுமிருக்கிறார். "கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டியதில்லை" யென்றாலும், நண்பருடைய சந்தேக நிவர்த்திக்குத்தக்க காரணங்கள் சொல்ல வேண்டியது அவசியமாய்த் தோன்றுகிறது.

தாழ்த்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், விலக்கப்பட்டவர்கள், கொடுமைப் படுத்தப்பட்டவர்கள் பலவாயிருப்பினும், பொருள் ஒன்றையே குறிக்கும் என்பதை நண்பர்கள் கவனிக்கவும். நமது நாட்டில் ஆரிய குருட்டு நம்பிக்கையினாலுண்டான பழக்க வழக்கத்தாலும், ஒவ்வொரு கூட்டத்தார் பணச்செருக்கினாலும், தமது அதிகாரத்தினாலும் யார்யாரை எவ்வாறெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களாகவோ, விலக்கப்பட்டவர்களாகவோ செய்து வைத்திருக்கிறார்கள்—செய்து வருகிறார்களென்பதைக் கவனிப்போம். முதலாவது பெண்களை ஆண்கள் தாழ்த்தப்பட்டவர்களாய் நடத்துகிறார்கள். பூர்வீக இந்தியக் குடி மக்களையெல்லாம் ஆரியர்கள் தாழ்த்தப்பட்டவர்களாய்க் கருதுகிறார்கள்.

மலையாள நாட்டுக் கோயில்களில் மறவர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்கள். திருச்செந்தூர் கோயிலில் வாணியர்கள் விலக்கப்பட்டிருக்கிறார்கள். திருவனந்தபுரம் கோயிலில் லாலா லஜபதியும், கன்னியா குமரியில் மகாத்மா காந்தியும், திருவண்ணாமலை திருக்கோவிலில் திரு. கண்ணப்பரும் விலக்கப்பட்டார்கள். சித்தூர் ஜில்லாப் பார்ப்பனர்கள் விசுவகர்மர்களால் தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள். அநேக இந்தியர்கள் ஒருவருக்கொருவர் தெருவில் நடக்கவிடாமலும், குளத்தில், குளிக்க விடாமலும், கிணற்றில் குடிக்கவிடாமலும், மடத்தில் படுக்கவிடாமலும் சத்திரத்தில் சாப்பிட விடாமலும் கொடுமைப் படுத்தி வருகிறார்கள். இந்துக்கோயில் மூலஸ்தானத்திற்குள் பிராமணரல்லாதாரெல்லாம் செல்வதற்கு லாயக்கில்லாதவர்களென்று பிராமணர்களால் ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு சமூகத்துக்குள்ளும் உட்பிரிவுகள் பல பலவாகச் சொல்லொணாக் கொடுமைகள் நடந்து வருவது யாருக்குத் தெரியாது? பாப்பாருக்குள் பாப்பார், முதலிக்குள் முதலி, பிள்ளைக்குள் பிள்ளை, நாடாருக்குள் நாடார், நாயக்கருக்குள் நாயக்கர்-இப்படி ஒருவருக்கொருவர் தாழ்த்தப்பட்டவர்களாய் நடத்துங் கொடுமையைக் கூறமுடியுமா? நாடார்களில் ஒரு சில நாடார்கள் படும்பாடு நமக்குள் நன்கு தெரியும். நாடார்களே அவர்களை 'நாடார்' என்று பட்டம் வைத்துக்கொள்ளக்கூடாதென்று கூடக் கஷ்டபடுத்துகிறார்கள். வெகு தூரம் போக வேண்டியதில்லை. விருதுநகரை எடுத்துக் கொள்வோம். அங்கு சில நாடார்கள் தாழ்ந்தவர்களாம்! அவர்கள் கலியாண காலத்தில் மற்ற நாடார்களைப் போல் பல்லக்கேற முடியாமல் தாழ்த்தப் பட்டிருக்கிறார்களாம். ஆனால் அவர்களிடம் பொது விஷயங்களுக்கு வரி, மகமை முதலானவைகளெல்லாம் வாங்கலாமாம். அவர்கள் பல்லக்கு மட்டும் ஏறக்கூடாதாம். ஆனால் அவர்கள் பணக்காராயிருந்தால், பல்லக்கல்ல, மற்றெல்லாம் கிடைக்குமாம். ஏழைகள் மீது தான் இரக்கமிராதாம். பணமும் நல்ல பெண்ணுமிருந்தால் பணத்தையும் பெண்ணையும் கொள்ளலாம், பெண் கொடுத்த சம்பந்தி தம் வீட்டுக்கு வந்தால் வீட்டுத் தாழ்வாரத்திற்றானிருக்க வேண்டுமாம். ஏன்? தமக்குத் தாழ்ந்த நாடாராம்! இக்கொடுமை தெற்கே ஒரு சில விடங்களில் நடப்பதும் நமக்குத் தெரியும்.

ஒரு மருத்துவன் கையில் நமது குடுமியைக் குனிந்துகொடுக்கலாம்; தேக ஆரோக்கியத்திற்கு எண்ணெய் தேய்க்கலாம்; ஒரு மருத்துவச்சி நமது நடு வீட்டில் ரகசிய அறைக்குள் நமது பெண்களைத் தொட்டு மருத்துவம் பார்க்கலாம்; ஆனால் மருத்துவக் குழந்தைகளை மட்டும் பள்ளியிற் சேர்க்க முடியாது, ஏன்? திட்டு—அல்லது வழக்கம். நமது தாய் வயிற்றிலிருந்து வெளியேற்றி சிறு கட்டிலிற் போட்டு முதலாவது காப்பாற்றுவது மருத்துவத்தாய், நமக்குக் கலியாணம் செய்து பல்லக்கில் ஏற்றுமுன் முதலலங்காரம் (சவரம்) மருத்துவ அலங்காரம். கடைசி நாளில் பாடையிலேற்றுமுன் செய்யுமலங்காரமும் மருத்துவ அலங்காரமாகுமன்றோ? இவ்வாறு நாம் பிறந்தது முதல் இறந்துபோகும்வரை உதவி செய்து இறுதியில்கடையாற்றும், கல்லெடுப்பும் கூட்டும் மருத்துவக் குழந்தைகள் படிப்புக்கு இடமில்லையென்றால் ஜாதிக்கெர்வமும் பணத்திமிரும் என்று யார்தான் சொல்ல மாட்டார்கள்? இத்திமிருக்கும், கெர்வத்திற்கும் திரு. நாயக்கர் கொடுக்கும் மருந்து நல்ல மருந்தல்லவா? அந்தோ! இன்னும் பல பல இடங்களில் தாழ்த்தப்பட்ட சம்பவங்கள் நமது நாட்டில் நடந்து வருவதுடன் தென்னாப்பிரிக்கா, கானடா, ஆஸ்ட்ரேலியா முதலிய அயல் நாடுகளில் பறையன் முதல் பார்ப்பான் வரையுமுள்ளவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களாய் நடத்துகிறார்கள். நாமெல்லாம் மகாத்மாவாகக்கருதும் "காந்தியவர்கள்" தென்னாப்பிரிக்கா வெள்ளையர்களால் கொடுமைப்படுத்தப்பட்டதை நினைத்தால் கண் கலங்குகிறது. தேகம் நடுங்குகிறது. இந்தியர்களை நாய்க்குச் சமானமாகக் கருதி ஒரு கோயிலில் "நாயும் கருப்பு மனிதர்களும் உள்ளே வரக்கூடாது" என்று எழுதியிருந்தார்களாம். இவ்வாறு ஜாதிக்கெர்வம், பணத்திமிர், அதிகாரச் செருக்கு, ஆள் சேர்க்கை, அகங்கார மிகுதியினாலே ஆங்காங்கு மனிதரை மனிதர் தாழ்த்தியும், விலக்கியும், ஒடுக்கியும், கொடுமைப்படுத்தியும் வருகிறார்கள் என்பது பிரத்தியட்சம். இந்தக் கொடுமைக்குள் நாடார்களும் அகப்படாமலில்லை யென்பதைச் சிறிது விளக்குவோம்.

திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில் பெரும்பாகங்களிலும், மதுரை ஜில்லாவில் சில பாகங்களிலுமுள்ள இந்து ஆலயங்களில் எல்லா நாடார்களும் சுமார் 50 வருடங்களாக விலக்கப்பட்டிருக்கிறார்கள், சில கிராமங்களில் பிராமணர் தெருவில் நடப்பதுங்கூட தடுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள்; கிணற்றில் நீர் எடுக்கவிடாமற் றடுக்கப்பட்டிருக்கிறார்கள்; இக் கொடுமைகளை நீக்கும்பொருட்டே நாடார்கள் தங்கள் வாழ்நாட்களின் பெரும் பகுதியைச் செலவிட்டிருக்கின்றார்கள்; கோடிக் கணக்கான பணங்களைக் கோர்ட்டுகளில் செலவாக்கியுமிருக்கின்றார்கள்; இன்னும் செலவாகிக் கொண்டும் வருகிறது என்ற உண்மையை ஒருவராலும் மறைக்கமுடியாது. இவ்வாறு மக்களை மக்கள் தாழ்த்தும் கொடிய வழக்க பழக்கங்களை அடியோடு தொலைக்கவேண்டுமென்பதுதான் திரு நாயக்கருடைய நோக்கமாகும். கொடிய வழக்கங்களை மாற்றவேண்டுமானால் வாய் வேதாந்திகளால் ஒன்றுமே ஆகாது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு சட்டபூர்வமாகவுள்ள அதிகாரங்கள் கிடைத்தால் தான் ஒருவாறு கொடுமைகளைத் தீர்க்கமுடியும்; ஆகையினாலேதான் திரு. நாடார் நியமனத்தில் திருப்தியடைவதாகச் சொல்லுகிறேனென்று திரு. நாயக்கர் சொன்னாரேயன்றி நாடார்கள் தாழ்ந்தவர்களென்றாவது தீண்டாதவர்களென்றாவது சொல்லவே இல்லை. அங்ஙனம் அவர் சொல்லியிருப்பாராயின் அப்பொழுதே ஆட்சேபனை ஏற்பட்

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

"தமிழ்நாடு"வின் பொய்யான அற்பத்தனமான குறும்பான செய்தி.

விருது நகர்வாசிகளின் கண்டனம்.

ஒரு நாடார் கனவான் எழுதுவது.

விருது நகர் டிசம், 1.

சென்ற 22—11—28ல் இவ்வூர் இந்து நாடார்கள் தேவஸ்தானக் கமிட்டியின் சார்பாக திருவாளர்கள் சவுந்தரபாண்டிய நாடார், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், பி. டி. ராஜன் எம். எல். சி. முதலியவர்களுக்கு நடந்த குதூகலமான உபசரிப்புக்குப்பின் 'தமிழ்நாடு' தினசரியில் பல பொய்க்கட்டுரைகளும் அனுமதேய அறிக்கைகளும் பலசங்கங்களின் பெயரால் வெளியாய்க் கொண்டு வருகின்றன. அவைகளுள் "தமிழ்நாடு" நிருபர் பெயரால் வெளிவந்துள்ள சில விஷயங்களுக்கு இவ்வூர்ப்பிரமுகர்கள்பலர் தந்தி மூலமாயும் கடித மூலமாயும் மறுப்புகள் விடுத்து உண்மையை விளக்கி விட்டனரெனினும் முக்கியமான ஒரு விஷயத்தை பட்டும் இங்கு குறிப்பாம். சென்ற 29-12-28ல் வெளிவந்துள்ள தமிழ்நாடுவில் 'ஆரிய ஹிந்து பால்ய நாடார் சங்கம்' என்ற தலைப்பின் கீழ் மேற்படி சங்கத்தின் பொது மீட்டிங்கு ஒன்று 25-11-28ல் கூடியதாயும் அக்கூட்டத்தில் ஸ்ரீ சவுந்திரபாண்டிய நாடார் அவர்களை உபசரித்த இவ்வூர்தேவஸ்தானக் கமிட்டியாரின் செயல் வருந்தத்தக்கதென்றும் இன்னும் இது போன்ற சில ருசிகரமான தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டதாகவும் வெளிவந்திருக்கிறது. இவ்வறிக்கை காரியதரிசியின் பெயரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இது விஷயமாக மேற்படி சங்கக்காரியதரிசியால் பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கும் கீழ்க்கண்ட மறுப்பை வாசகர்கள் ஊன்றி நோக்கவிரும்புகிறோம்.

ஆரிய இந்து பாலிய நாடார் சங்கத்தின் மறுப்பு.

நாளது 29—11—28-ல் வெளி வந்த 'தமிழநாடு' பத்திரிகையில் மேற்படி சங்கக் காரியதரிசியின் பெயரால் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. அவ்வறிக்கையில் நாளது 25—11—28ல் சங்கத்தின் பொதுக்கூட்டம் கூடியதாகவும் அதில் சில தீர்மானங்கள் செய்ததாகவும் கண்டிருக்கிறது. ஆனால், இவ்வறிக்கை முற்றிலும் பொய்யானதென்றும் மேற்படி சங்கத்தின் மீட்டிங் கூடவில்லை என்றும் பிரஸ்தாப தீர்மானங்கள் செய்யப்படவில்லையென்றும் உத்தியோக முறையில் அறிவித்துக் கொள்ளுகிறோம். பொய்யாகக் காரியதரிசி என்று கையொப்பமிட்டு நிருபம் அனுப்பிய நண்பரையும் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை. இவ்வித பொய்ப்பிரசாரங்கள் செய்வதினாலும் பொய்ப் பிரசாரங்களைத் 'தமிழ்நாடு'வில் பிரசுரிப்பதாலும் 'தமிழ்நாடு'விற்கு செல்வாக்கு குறைகிறதென்பதை நிருப நேயர்களும் கனம் பத்திராதிபர் அவர்களும் உணராதது குறித்து வருந்துகிறோம். நிருபம் அனுப்பிய நண்பரின் பெயரைகனம் 'தமிழ்நாடு' பத்திராதிபர்வர்கள் எங்களுக்கு அறிவித்தால் நன்றியுடையவர்களாயிருப்போம்.

எஸ். ஷண்முகசுந்தரம்
காரியதரிசி,
ஆரிய இந்து பாலிய நாடார் சங்கம்
விருதுநகர்.

மேற்கண்ட அறிக்கையிலிருந்து தமிழ்நாடுவில் பிரசுரிக்கப்பட்ட விஷயங்கள் யாவும் சில விஷமிகளால் பொய்க்கதைச் சாத்திட்டு அனுப்பப்பட்ட பொறுப்பற்ற பொய்ப் பிரசாரம் என வாசகர்கள் எளிதில் அறிந்து கொள்ளலாம். விருது நகரில் சுயமரியாதை வீரர்களுக்கு நடந்த சிறந்த உபசரிப்பைக்கண்டு மனம் பொறாத சில விஷமிகள் 'தமிழ்நாடு' பத்திரிகையின் மூலம் தங்கள் அயோக்கியத்தனத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டனர். இப்பொறுப்பற்ற வியாசங்கள் நம் வைக்கம் வீரரையும் அவர் தம் சுயமரியாதை இயக்கத்தையும் இழி முறையில் பழிக்குந்தன்மையாயிருந்தலால் 'தமிழ்நாடு' ஆசிரியரும் அவைகளைப் பெருமையுடன் பெற்றுக் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்து மனமகிழ்ச்சி உற்று வருகிறார். இது போன்ற விஷமக் கட்டுரைகள் 'தமிழ்நாடு'வில் எத்தனை பிரசுரிக்கப்பட்டாலும் பொதுமக்கள் சட்டைசெய்யப்போவதில்லை. இவ்விதப் பொய்ப் பிரசாரங்களும் கட்டுரைகளும் இன்னும் பல தமிழ்நாடுவில் பிரசுரிக்கத் தயாராகி வருகின்றன. எத்தனை வந்தாலும் உண்மை எந்நாளும் மறையப்போவதில்லை. விருதுநகர் வாசிகளும் நாடார் மக்களும் சுயமரியாதை இயக்கத்தினின்றும் எந்நாளும் பிணக்குறப் போவதில்லை. ஸ்ரீ நாயக்கர் அவர்களின் செல்வாக்கு குறையப் போவதுமில்லை. ஆகையால், அனாவசியமாக ஆதாரமற்ற பிரசாரங்களைப் பத்திரிகைகளுக்கு அனுப்பிக்கம் பெயருக்கும் 'தமிழ் நாடு' பத்திரிகைக்கும் அபகீர்த்தியை தேடிக்கொள்ளாதிருத்தல் அறிவுள்ள நிருபர்களின் கடமையாகும்.

விருதுநகர் டிசம்பர் 3.

திரு. எஸ். ராமசாமி நாடார் அவர்கள் பத்திரிகைகளுக்கு கீழ்க்கண்ட விவரங்களையனுப்பியுள்ளார்—

திரு ஈ. வெ. இராமசாமி நாயக்கரைக் கண்டித்தும் "குடி அரசு" பத்திரிகையைப் பகிஷ்கரிப்பதாகவும் தீர்மானம் நிறைவேற்றியதாக அறிவிக்கப்பட்டுள்ள பாண்டியன் சங்கமென்னும் போலிச் சங்கமொன்றின் கூட்டத்திற்கு நான் சென்றிருந்ததாக அதனுடன் என் பெயரும் சேர்க்கப்பட்டது கண்டு நான் அளவற்ற வியப்பும் விசனமுமடைந்தேன். முதலாவதாக அத்தகைய சங்கமொன்றிருக்கின்றதாவென்றே சந்தேகிக்கின்றேன். ஒருக்கால் விருதுநகரின் மூலை முடுக்குகளில் எங்காயினும் அத்தகைய சங்கமொன்றிருக்குமாயினும் நான் அதன் கூட்டமொன்றுக்குச் சென்றதில்லை என்றும் உயர் திரு நாயக்கர் அவர்களைக் கண்டித்ததாக சொல்லப்படும் கூட்டங்கள் எதிலும் நான் இருக்கவில்லை என்றும் நான் கலந்து கொண்டதில்லை என்றும் வற்புறுத்திக் கூறுகின்றேன். ஆதலால் இத்தகைய போலி ரிபோர்ட்டு குறும்புக்காரர்களின் செய்கையாகத்தானிருக்குமென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். இத்தகைய ஈனத்தொழிலில் ஈடுபட்ட பொய்யர்கள் ஏன் கேவலமாகப் பொய் விஷயங்களைக் கட்டிவிட வேண்டுமென்பதும் 'தமிழ்நாடு' பத்திரிகையும் ஏன் இத்தகைய அற்பத்தனமான கடிதங்களை வெளியிட்டு தன் பெயரைக்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்பதும் எனக்கு விளங்கவில்லை. இத்தகைய அற்பத்தனமும் குறும்புத்தனமான ரிபோர்ட்டுகளால் மாயவரம் நாடார்கள் அநியாயமாக நிரபராதியான திரு நாயக்கர் அவர்களைக் கண்டிக்க முற்படச் செய்ததைக்கண்டு நான் பின்னும் அதிகமாக விசனிக்கிறேன். உண்மையறியாது அவர்கள் அறியாமையினால் செய்தவற்றைத் திரு நாயக்கர் அவர்கள் மன்னிப்பார்களென்று நம்புகின்றேன். பின்னும்பிசகுகள் செய்வதைத்தவிர்ப்பதன் பொருட்டு வெளியூர்களிலுள்ள என்வகுப்பு நண்பர்களை 'தமிழ் நாடு'வில் வரும்விஷயங்களை அலட்சியம் செய்து ஒதுக்குவதுடன் கூடிய சீக்கிரத்திலேயே வெளியிடப்படும் நாடார் மகாஜன சங்கத்தின் பிரஸ் அறிக்கைகளுக்காகக் காத்திருக்கும்படி நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்குள்ளேயே நாடார்களுக்கிடை ராஜீய உபதேசம் செய்ய முற்பட்டுவிட்ட எல்லா முத்தராங்கங்களும் நாடார் தலைவர்களாலும் அவர்களுடைய பிரதிநிதித்துவமான சங்கங்களாலும் உண்மையுணரப்படுமட்டும் வாயை மூடிக் கொண்டிருப்பார்களாக.

விருதுநகர் வாசிகளின் ஆத்திரம்

திரு. சௌந்திர பாண்டிய நாடார் அவர்களின் நியமனத்தைப் பாராட்டக் கூடின 26-ந்தேதி பொதுக்கூட்டத்தைப்பற்றி 'தமிழ்நாடு' பத்திரிகையில் முற்றிலும் பொய்யான அற்பத்தனமான ஏழைக்குறும்பான வியாசம் வெளியிடக் கண்டு விருது நகர் வாசிகள் திகைப்புற்றனர். திரு. நாயக்கர் அவர்களை ஒருவருமே தூஷித்துப்பேசினதுமில்லை; கூட்டத்தில் [illegible]தபான சச்சரவும் நிகழவுமில்லை; திரு. நாயக்கர் அவர்கள் நாடார்கள் சமூகத்தை இழிவு படுத்திக் கூறினரென்றும் பிரசுரித்த பொய்க்கூற்று மிகவும் கண்டிக்கத்தக்கது.

திரு. நாயக்கர் அவர்கள் நாடார்களின் பண்டைய நிலைமையைப்பற்றிக் கூறவே கிடையாது; ஆனால், நாடார்கள் சமூகத்தை உயர்தர சாதியினர் என்று கூறிக்கொள்வார்கள் எவ்விதமாக ஆழ்த்தி வைக்கப்பட்டிருக்கின்றார்களென்று, இந்த உண்மைக்குச்சான்றாக, இதைப்பற்றி மிகவும் தெளிவாகவும் விபரங் கூறினர். இச்சொற்பெருக்கு சனங்களின் மனத்தைக் கவர்ந்து நின்றது. திரு. நாயக்கரவர்களின் சொன்மாரியில் விளைந்த ஒவ்வொரு உண்மையையும் செவியுற்றோர் ஆமோதித்துத்தான் ஆகவேண்டியிருந்ததேயன்றி வேறன்று.

(இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

பொய் ! பொய் !! வெறுக்கத்தக்க பொய் !!!

'தமிழ்நாடு' 'சுதேசமித்திரன்' பத்திராதிபர்களின் இழிகுணமும் அவர்கள் நிருபர்களின் ஈனத்தன்மையும்,

திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் விருது நகரில், திரு சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் ஜில்லா போர்ட்டு பிரசிடெண்ட் நியமனம் பெற்ற கூட்டத்தில், நாடார்களை தீண்டப்படாதவர்கள் என்று சொன்னதாகவும், அதை ராவ்பகதூர் ரத்தினசாமி நாடார் வாசகசாலைக் கூட்டத்தார் கண்டித்து தீர்மானம் செய்ததாகவும் வேண்டுமென்றே திரித்து அயோக்கியத்தனமான பொய்யை நுழைத்து "தமிழ்நாடு" பத்திராதிபரும் "சுதேசமித்திரன்" பத்திராதிபரும்; தங்கள் தங்கள் நிருபர்கள் போல் வெளியிட்டிருக்கின்றார்கள். இது, முன்னொரு நிருபர் எழுதி இருப்பதுபோல் மேல் கண்ட இரண்டு தினசரி பத்திரிக்கைக்காரரும் மற்றொரு வாராந்தரப்பத்திரிகைக்காரரும் திரு நாயக்கரால் தங்கள் பத்திரிகைக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் ஆபத்து ஏற்பட்டதென்று பயந்து சதியாலோசனையின் பேரில் ஆரம்பித்த அயோக்கியத்தனம் என்பதை ருஜு செய்து விட்டது. எப்படியெனில் திரு நாயக்கரின் விருது நகர் உபந்யாசத்தில் நாடார் சமூகத்தை அயோக்கியர்களால் கொடுமைப் படுத்தப்பட்ட சமூகம் என்று பேசியிருப்பதாக திரு நாயக்கரே தமது பத்திரிகையில் ஒப்புக் கொண்டிருக்கின்றார். மற்றும் நாடார் சமூகப்பிரமுகர்களும் பத்திரிகைகளும் இம்மாதிரி அனேக சமயங்களில் பேசியும் எழுதியும் ஒப்புக்கொண்டுமிருக்கின்றார்கள். ஆகையால் அதைப் பற்றி யார் கண்டனத் தீர்மானம் போட்டாலும் அச்சமூகத்தார்களே பதில் சொல்லிக் கொள்ளுவார்கள். அன்றியும் பொது மக்களும் இக்கண்டனத் தீர்மானத்தைப் பற்றி தப்பிதமாய் நினைத்து விடமாட்டார்கள். ஆனால் "திரு நாயக்கர் நாடார்களை தீண்டாதார்கள் என்று சொன்னார்" என்று எழுதியிருக்கும் நிருபரின் இழிதன்மையும் வாசகசாலையார் தீண்டாதார் என்று சொன்னதற்காக நாயக்கர் மீது கண்டனத் தீர்மானம் செய்தார்கள்" என்று எழுதிஇருக்கும் ஈனத்தன்மையுந் தான் பொதுமக்களை ஒரு சமயம் நாயக்கர் மீது தப்பர்த்தம் கொள்ளும்படி செய்தாலும் செய்து விடலாம். ஏனெனில் அதை முன்னிட்டு தான் இப்பத்திராதிபர்கள் இந்த இழிதன்மையிலும் இறங்கி இருக்கிறார்கள். நிற்க அந்நிருபங்கள் இழித்தன்மையும் ஈனத்தன்மையுமானதென்பதற்கு ஆதாரம் என்னவென்றால், மேல்படி வாசகசாலையின் உதவிக் காரியதரிசியாகிய திரு பி. சொக்கலிங்கம் என்பவர் திரு நாயக்கருக்கு எழுதியுள்ள பிரஸ் நகல் எடுத்த கடிதத்தில் தீர்மானத்தின் நகலைக் குறிப்பிட்டிருப்பதாவது:—

"ஸ்ரீமான் சவுந்திர பாண்டிய நாடார் இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராக நியமனம் பெற்றதை பாராட்டக் கூட்டிய கூட்டத்தில் ஈரோடு ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் நாடார்களை தாழ்த்தப்பட்டவர்களென்றும் ஒடுக்கப்பட்டவர்களென்றும் உண்மைக்கு மாறாகப் பேசியதை இக்கூட்டம் கண்டிக்கிறது" என்று தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே நாடார்களை நாயக்கர் தீண்டாதவர்கள் என்று சொன்னதாகவும் அதை நாடார்கள் கண்டித்து தீர்மானம் செய்ததாகவும் "தமிழ்நாடும்" "மித்திரனும்" நிருபர்கள் போல் பிரசுரித்திருப்பதின் உண்மையையும் அவர்களுடைய யோக்கியதையையும் வாசகர்கள் இப்போதாவது தெரிந்து கொள்ளட்டும் என்றே இதை எழுதுகிறோம். இதற்குமேலும் வாசகர்களுக்கு தீர்மானத்தின் உண்மையை அறிய ஆவலிருக்குமானால் தயவு செய்து அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதிதெரிந்து கொள்ளுங்கள்.

இதில் ஒன்றும் மறைவு இல்லை:

விலாசம்:— காரியதரிசி
ராவ்பகதூர் இரத்தினசாமி
நாடார் வாசகசாலை
விருதுநகர்.

தம்பட்டம்.

மேயோக்கள்.

(சித்திர புத்திரன் எழுதுவது)

ஆயிரக்கணக்கான மேயோக்கள் தோன்றினாலும் நம் நாட்டு வைதீகர்களுக்கும் பண்டிதர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் புத்தி வாராது என்பது உறுதி. இந்த நாட்டில் பார்ப்பனீயம் இருக்கும் வரையும், மனுதர்ம சாஸ்திரம் இருக்கும்வரையும் ராமாயணமும் பாரதமும் பெரிய புராணமும் இருக்கும் வரையும், விஷ்ணு புராணமும் சிவமகாபுராணமும் சிவபாக்கிய புராணமும் இருக்கும் வரையும், கெருட புராணமும் பராசர்ஸ்மிருதியும் இருக்கும்வரையும், சுவாமியையும் அம்மனையும் படுக்கை வீட்டிற்குள் ஒரே கட்டிலின்மேல் படுக்க வைத்து விட்டு பால் செம்பை கட்டிலின் கீழ் வைத்து கதவை மூடி விட்டு வருகின்ற கோவில்கள் இருக்கும் வரையும், சுவாமி தாசி வீட்டிற்கு போகும் உற்சவங்கள் நடக்கின்றவரையும், ஞானம் போதித்த சமணர்களை கழுவில் ஏற்றிய உற்சவங்கள் நடக்கின்றவரையும், ஒருவன் பெண்ணையும் ஒருவன் மனைவியையும் திருடிக்கொண்டு போனவர்களையும் திருட்டுத்தனமாக விபசாரம் செய்தவர்களையும் சுவாமியாக வைத்து கும்பிடும் கோவில்கள் உள்ள வரையும், 2 பெண் ஜாதி 3 பெண்ஜாதி 100 வைப்பாட்டி 200 வைப்பாட்டி உள்ள சுவாமிகள்நமது நாட்டில்இருக்கும்வரையும், சுவாமி என்றும் அம்மனென்றும் நாச்சியாரென்றும் கல், செம்பு, பித்தளை பொம்மைகளுக்கு பேர் வைத்து தேர் என்றும் ரதம் என்றும் பெயருள்ளதும் ஆயிரம் பேர் ஐயாயிரம் பேர் பத்தாயிரம் பேர் இழுத்தாலும் அசைக்கமுடியாத வண்டிகளில்வைத்து இழுப்பதே பக்தியும் மோக்ஷமுமாயிருக்கும் வரையிலும் பட்டினி கிடந்து சாகப்போகிறவனுக்கு கஞ்சி ஊற்றாமல் தின்று கொழுத்த சோம்பேறிகளுக்கு ஆக்கிப்படைப்பதே புண்ணியம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறவரையிலும், குடிக்கப் பாலில்லாத குழந்தைகள் தேவாங்கைப் போலவும் குரங்குக் குட்டிகளைப்போலவும் தொத்திக்கொண்டும் எலிக்குஞ்சுகளாகக்கத்திக்கொண்டும் சாவதை கொஞ்சமும் கவனிக்காமல் குடம் குடமாய் பாலை கல்லுருவத்தின் தலையிலும் பாம்புப்புற்றிலும் ஊற்றிப் பாழாகும் வரையிலும், ஏழை மக்களை வருத்தி ஒன்றுக்கு இரண்டாக வட்டி என்றும் நிபந்தனை என்றும் கொள்ளைக்காரர்கள் போல் பணம் சேகரித்துகண்ணில்லா திருடர்கள் என்று சொல்லத்தக்க மாதிரி கோடிக்கணக்கான மக்கள் எழுத்து வாசனை என்பதே ஒரு சிறிதும் இல்லாமல் தற்குறிகளாய் இருப்பதை சற்றும் கவனியாமல் கோவிலென்றும் குளங்களென்றும் கும்பாபிஷேகமென்றும் வேதபாடசாலை என்றும் சமஸ்கிருத பாடசாலை என்றும் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் சாப்பாடுபோடும் சத்திரமென்றும் சொல்லி பொருளைப் பாழாக்கும் அறிவிலிகள் மிகுந்திருக்கும்மட்டும், சாணியையும் மூத்திரத்தையும் கலக்கி குடிக்கும் சடங்குகள் உள்ளமட்டும், அறியாத பெண்களுக்கு சாமி பேரைச் சொல்லி கழுத்தில் கயிறு கட்டி அவர்களை பொது ஜனங்கள் அனுபவிப்பதற்காக முத்திரை போட்டு விபசாரிகளாக விட்டுக் கொண்டிருக்குமட்டும், அவர்களைக் கொண்டே கோவிலுக்கும் சாமிக்கும் உற்சவத்திற்கும் சேவை செய்யும் முறைகளை வைத்துக் கொண்டிருக்குமட்டும் மனிதனுக்கு மனிதன் தொட்டால் பாவம் பார்த்தால் தோஷம் தெருவில் நடந்தால் கெடுதி என்கின்ற கொடுமைகள் இருக்கும் வரையும், மத ஆதாரம் என்பதை அந்தமதத்தைச் சேர்ந்த மக்களே படிக்கக்கூடாது கேட்கக்கூடாது என்கின்ற கொள்கையைக் கொண்ட ஆதாரங்கள் வேதமாக இருக்கும் வரையிலும், இனியும் அமெரிக்காவிலிருந்தும் ஆஸ்திரேலியாவிலிருந்தும் மேயோக்கள் வராவிட்டாலும் இந்தியாவிலிருந்தே ஆயிரக்கணக்கான மேயோக்கள் புற்றீசல்கள் போல் புலபுலென கலகலெனப் புறப்படுவார்கள் என்பதை பார்ப்பனர்களும் பண்டிதர்களும் உணர்வதோடு பார்ப்பனர்களுக்கும் வெள்ளைக்காரருக்கும் முறையே சமூகத்தையும் தேசத்தையும் காட்டிக்கொடுத்து வயிறுவளர்க்கும் 'தேசீய' மூடத்தெங்குகளும் உணரவேண்டுமாய் தம்பட்ட மடிக்கின்றேன்.

ஸ்ரீபாலசுப்ரமண்ய பஜனை கீர்த்தனை

சிங்கார வர்ணமெட்டுகளால் புதுவிதமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. வேண்டுவோர் விலையில் 4½ அணாஸ்டாம்ப னுப்பிப் பெறுக.

எஸ். வி. நாதன்
எலப்புள்ளி P. O. பாலக்காடு.

வரதராஜுலுவின்
வயிற்றுப்பிழைப்பு நாடகமும்
அதற்கு
சுதேசமித்திரன் தீவட்டி பிடித்தலும்.

சேலம் மின்சார மருந்து வியாபாரம் திரு. வரதராஜுலுவின் வயிற்றுப் பிழைப்பு நாடகத்தை அறியாதவர்கள் தென்னிந்தியாவில் யாரும் இருக்கமாட்டார்கள். இவர் அறிவு வந்து வயிற்றுப் பிழைப்ப நாடகம் ஆடத் தொடங்கியது முதல் இதுவரை எத்தனை விதமான தந்திரங்களைகையாண்டு வந்திருக்கின்றார்என்பதைப்பற்றியும் பார்ப்பனர்களும் திரு நாயக்கர் மீது இம்மாதிரிவிஷமப்பிரசாரம் செய்து எப்படி தோல்வி அடைந்திருக்கின்றார்கள் என்பதுபற்றியும் நான் சிறப்பாக பார்ப்பனரல்லாத ஜன சமூகத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. அதிலும் 'திராவிடன்' 'குடி அரசு' வாசகர்களுக்கு நான் கொஞ்சமும் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

இப்படி இருக்க நிவர்த்தி இல்லாத நிலையில் இவரது வயிற்றுப் பிழைப்பு நாடகத்தின் வாயில் மண் விழும்படி திரு. நாயக்கர் பிரசாரம் செய்து விட்டதினால் அவர் மீது உள்ள குரோத்தையும் துவேஷத்தையும் மனதில் வைத்துக்கொண்டு இப்போது அவர் மீது விஷமப்பிரசாரம் செய்ய தைரியமாய்முன்வந்துவிட்டார்கள். இதனால் திரு நாயக்கருடைய தொண்டையோ பெருமையையோ சுலபத்தில்கெடுத்துவிடலாம்என்று மனப்பால் குடிப்பதின் மூலம் திரு. நாயுடுவின் வண்டவாளம்தான் வெளிப்படுமேதவிர திரு நாயக்கர் இயக்கத்திற் எவ்வித இடையூறும் ஏற்படப் போவதில்லை என்பது உறுதி.

திருவாளர் நாயுடு தமது சூழ்ச்சிக்கும் விஷமப் பிரசாரத்திற்கும் விருது நகரைப் பிடித்தது கொள்ளியை எடுத்து தலையை சொரிந்து கொண்டதையே ஒக்கும். ஏனெனில், இதனலெல்லாம் நாடார் மக்கள் ஏமாந்து போய் விடுவார்கள் என்றும் கனவு கண்டு கொண்டிருக்கின்றார். நாடார் மக்களுக்கும் பொது ஜனங்களுக்கும் பெரிதும் தங்கள் நிலைமை இன்னதென்றும் இரசவாதியான மின்சார ரச வியாபாரி திரு. வரதராஜுலு நாயுடுவின் நிலைமை இன்னது என்றும் திரு. நாயக்கர் நிலைமை இன்னது என்றும் ஏற்கனவே நன்றாய் தெரியும். இதற்கு முன் நாடார்கள் விஷயத்தில் திரு நாயுடு நடந்து கொண்ட விதமும் திரு. நாயக்கர் நடந்து கொண்ட விதமும் யாருக்காவது தெரிந்து கொள்ள உண்மையான ஆசை இருக்குமானல் முதலாவது 1922-ல் கூடிய திருப்பூர் மாகாண மகாநாட்டை நினைவுக்கு கொண்டுவந்து பாருங்கள்.

அந்த திருப்பூர் மகாநாட்டில திரு. நாயக்கர் நாடார் மக்கள் சில ஜில்லாக்களில் மிகவும் தாழ்த்தப்பட்டு கோவில் பிரவேசம் முதலியவைகள் மறுக்கப்பட்டதைக் கண்டித்தும் அக்கொடுமைக்கு அனுகூலமாயுள்ள மக்களையும் ஆதாரங்களையும் கண்டித்தும் ஒரு தீர்மானம் கொண்டு வந்து பிரேரேபிக்கும்போது பார்ப்பனர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அதை எதிர்த்ததும்இந்த திரு. வரதராஜுலுவும் அது சமயம் பார்ப்பனர்களுக்கு அனுகூலமாயும் திரு. நாயக்கர் தீர்மானத்திற்கு விரோதமாயும் இருந்து அத்தீர்மானம் சரியானபடி நிறைவேறாமல்போக ஆளாயிருந்ததும் பிறகு மகாநாடு நடந்து 2, 3 மாதம வரையில் கூட நாடார் வாலிபர்கள் திரு. வரதராஜுலுவை கண்டபடி யெல்லாம் வைதும் கண்டித்தும் வந்ததும் அவருக்கு நேரே கடிதம் முதலியவைகள் எழுதி மிக அசங்கியமாய் திட்டியதும் அப்போதைய பத்திரிகைகளை கவனித்து வந்தவர்களுக்கு தெரியாமல் போகாது. 'நாடார் குல மித்திரன்' முதலிய பத்திரிகைகளில் இப்பொழுதும்பார்த்தால் அவைகிடைக்கும். அதுமுதல்இதுவரை தாழ்த்தப்பட்ட-கொடுமைபடுத்தப்பட்ட-மக்களை விடுவிப்பதிலும் ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பதிலும் தீண்டாமையை ஒழிப்பதிலும் திரு. நாயக்கர் செய்து வந்த வேலையும் திரு. வரதராஜுலு செய்துவந்திருக்கின்ற வேலையும் பொது வாழ்வில் கவனம் செலுத்திவரும் யாவருக்கும் தெரிந்திருக்கும்.

குருகுலத்தில் பார்ப்பனர் செய்து வந்த அக்கிரமத்திற்கு திரு வரதராஜுலும் திரு கல்யாணசுந்தர முதலியாரும் உதவியாய் இருந்ததும் பணம் சேர்த்து கொடுத்ததும் அவைகளை திரு நாயக்கர் வெளியாக்கின பிறகு மேல்கண்ட இருவரும் நாயக்கருக்கு பயந்து கொண்டு குருகுலத்தை கண்டிக்கத் தொடங்கி அதன் மூலம் பார்ப்பனரல்லாதாரிடம்திரு நாயுடுவுக்கு சிறிது செல்வாக்கும்பணவரவும்உண்டானதும் நடுத்தூக்கில் விட்டுவிட்டு திடீரென்று குட்டிக்கரணம் அடித்து மேல்படி செல்வாக்கைக் கொண்டு மறுபடியும் பார்ப்பனர்கள் வாலைப்பிடித்துத் திரிய அவர்களிடம் போய் சேர்ந்துகொண்டதும் அது முதல்நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் இவரிடம் வைத்திருந்த சிறிது அபிமானத்தையும் நம்பிக்கையையும் அறவே ஒழித்து விட்டதும் யாவருக்கும் தெரிந்த விஷயமேயாகும்.

அதுபோலவே வைக்கம் தெருவில் நடை உரிமை சத்தியாக்கிரக விஷயத்திலும் திரு நாயக்கர் நடந்துகொண்டதும் திரு வரதராஜுலு நடந்து கொண்டதும யாவருக்கும் தெரிந்த விஷயமேயாகும்.

உண்மை இப்படியிருக்க திரு நாயக்கர் நாடார்களை அவமானமாகப்பேசி விட்டார் என்று அதுவும் திரு வரதராஜுலு விஷமப்பிரசாரம் செய்தால் அதை பொது ஜனங்கள் சுலபத்தில் நம்பி மோசம் போய் விடுவார்கள் என்று நினைப்பது பகற் கனவேயாகும்.

திரு நாடார் சமூகம் அயோக்கியர்களால் சுய—நலக்காரர்களால்— கொடுமைபடுத்தப்பட்ட அல்லது அழுந்தப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட அல்லது தாழ்த்தப்பட்ட சமூகம் என்பதில் யாருக்காவது சந்தேக முண்டா என்று கேட்கின்றேன். அல்லது இதை நாடார் கனவான்கள் யாராவது மறுக்கின்றார்களா? என்று கேட்கின்றேன். யாராவது ஒருவர் இருவர் மறுப்பவர்கள் இருக்கும் பக்ஷம் நாடார் சமூக மகாநாடுகளிலேயே தலைமை வகித்தவர்கள் உபசரணைத் தலைவர்கள் முதலியவர்கள் சொற்பொழிவுகளையும் நாடார் சமூகத்தார் அரசாங்கத்திற்கு அரசியல் சம்மந்தமான உரிமைகளை வேண்டிதெரிவித்துக் கொண்டவிண்ணப்பங்களையும் பார்த்தால் அக்கனவான்களேஇதை ஒப்புக்கொண்டிருப்பது விளங்கும். அதுவும் போரர்விட்டால் சிற் சில இடங்களிலாவது நாடார் சமூகத்திற்கு கோவில் நுழைவும் தெருவில் நடப்பதும் மறுக்கப்பட்டிருப்பதை யாவது ஒப்புக்கொள்ளுகின்றார்களா, இல்லையா? என்றும், அப்படி ஒப்புக்கொள்வதானல் அது எதனால் என்றும் யோசித்துப்பார்த்தால் விளங்காமல் போகாது.

நாடார் சமூகம்கொடுமைப்படுத்தப்பட்ட சமூகம் தான், தாழ்த்தப்பட்ட சமூகம்தான் என்பதை உறுதியாய் அறிந்த பிறகுதான் அதற்காக திரு நாயக்கர் முதலியோர் உழைக்கின்றார்கள் என்று நம்பியே காங்கிரசிலும் சில நாடார் வாலிபர்கள் வந்து சேர்ந்ததும், சேர்ந்தது மாத்திரமல்லாமல் "திரு நாயக்கர் போன்றவர்கள் காங்கிரசில் இருப்பதால் தான் நாடார்கள் காங்கிரசில் சேர முடிந்தது என்றும் இல்லாவிட்டால் நாடார்கள் காங்கிரசில் சேர முடியாது" என்றும் அனேக நாடார் வாலிபர்கள் பொதுக்கூட்டங்களில் பேசியிருக்கின்றார்கள்.

அன்றியும் திரு இரத்தினசாமி நாடார் ஞாபகச் சின்ன வாசகசாலையின் ஒரு ஆண்டுவிழாவின் போது திரு நாயக்கரும் திரு ராஜகோபாலாச்சாரியாரும் வந்திருந்த காலையில் அவர்களை ஆடம்பரமாய் வரவேற்றதும், அந்த கூட்டத்தில் ஒரு நாடார் கனவான் எழுந்து தங்கள் சமூகத்தை கொடுமைப்படுத்தி தாழ்த்தி இழிவு படுத்தி வைத்திருக்கும் கூட்டத்தாருடன் தாங்கள் ஒத்துழைக்க முடியாது என்றும் அவர்கள் சேர்ந்திருக்கும் காங்கிரசுடனும் ஒத்துழைக்க முடியாது என்றும் பேசின காலத்தில் திரு நாயக்கர் எழுந்து நாடார் சமூகத்தை கொடுமைப்படுத்தி தாழ்த்தி இழிவு படுத்தி வைத்திருக்கின்றவர்கள் தாங்கள் அல்லவென்றும், அது சூழ்ச்சியும் ஆணவமும் ஜாதித்திமிரும் கொண்ட பார்ப்பனர்களால் ஏற்பட்டதென்றும், அவர்களால் நாடார்கள் மாத்திரம

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

ஒரு புதிய தந்திரம்.

சைமன் கமிஷன் விசாரணையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தைப் பற்றியும் பார்ப்பன ஆதிக்கத்தைப்பற்றியும் ஆதித்திராவிடர்களின் கஷ்டங்களைப்பற்றியும் விஷயங்கள் தாராளமாய் வெளியாகி வருவதால் இந்த சங்கதி மற்ற நாட்டார்களுக்கும், மாகாணத்தார்களுக்கும் தெரியக்கூடாது என்கின்ற எண்ணத்தின்மீது பார்ப்பனர்கள் கமிஷன் விசாரணையை பத்திரிக்கையில் வெளியிடக்கூடாது என்று ஒரு புதிய சூழ்ச்சிகண்டு பிடித்திருக்கின்றார்கள். அதிலும் கமீஷன் தெற்கே வரவர மிகவும் ஜாக்கிரதையாய் இருக்க ஆசைப்படுகிறார்கள். இந்த புத்தி முதலில் இல்லாததற்கு காரணம் சாட்சிகள் இவ்வளவு "மோசமாக" சொல்லிவிட்டார்கள் என்று எண்ணிவிட்டார்கள் போலும்.

தென் இந்திய நல உரிமைச் சங்கம்

சைமன்கமிஷன் சென்னைக்கு வரும்போது பார்ப்பனரல்லாதார் இயக்க சார்பாய் ஒரு அறிக்கை தயார்செய்ய நிர்வாக சபையார் ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். அக்கமிட்டியில் திருவாளர்கள் ஓ. தணிகாசலம்செட்டியார், ஜி. நாராயணசாமிசெட்டியார், ஈ. வெ. ராமசாமிநாயக்கர், எ. ராமசாமி முதலியார் கே. வி. மேனன் பி. சுப்பரமணிய செட்டியார் பென்ஷன் ஜில்லாஜட்ஜி வரதராஜுலு நாயுடு, பி. டி. குமாரசாமி செட்டியார் அவர்கள், அங்கத்தினராவார்கள்

திரு. சௌந்தரபாண்டியருக்கு சிற்றுண்டி விருந்து.

தேவகோட்டை தாலூக்கா போர்டு அங்கத்தினர் திரு. கருமுத்து S. சிவலிங்கம் அவர்களாலும் திருப்பத்தூர் யூனியன் போர்டு பிரசிடெண்டு திரு. P. S. P. பிரான்மலை ராவுத்தர் அவர்களாலும் திருப்பத்தூர் வட்டத்து வாசிகளாலும், ராமனுதபுரம் ஜில்லா போர்டு தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. W. P. A. சௌந்தரபாண்டிய நாடார் அவர்களுக்கு திருப்பத்தூர் டிராவலர்ஸ் பங்களாவில் 9-12-28ல் ஒரு சிறந்த சிற்றுண்டி விருந்து நடத்தப்பட்டது.

"திராவிடன்" தொழிலாளர் ஆண்டுவிழா

சென்னை "திராவிடன்" தொழிலாளர் சங்க முதலாவது ஆண்டு விழா சென்னை சிந்தாதிரிபேட்டை நேபியர் பார்க்கில் திரு கண்ணப்பர் அவர்கள் தலைமையில் 28-11-28 தேதி மாலை 5-மணிக்கு நடந்தேறியது.

அதுசமயம் திரு. ஈ. வே. ராமசாமிநாயக்கருக்கு 'திராவிடன்' சங்கத்தாரால் ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. திரு. நாயக்கர் தொழிலாளர் நிலை என்பதைப்பற்றி ஓர் அரிய உபன்யாசம் செய்தார் திரு. கண்ணப்பர் திரு. தண்டபாணி பிள்ளை திரு. சபாபதி முதலியார் முதலியவர்களும் பேசினார்கள்.

திரு. நாயக்கர் அவர்களின் படத்திறப்பு விழா.

கொட்டாம்பட்டி.

நிகழும் விபவ வருடம் மார்கழி மாதம் 9ந்தேதியில் (23—12—28) மதுரை ஜில்லா மேலூர் தாலூகாவைச் சேர்ந்த கொட்டாம்பட்டியில் 'குடிஅரசு' பத்திராதிபராகிய ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் படத்தை சிவகங்கை தாலூகா போர்டு பிரசிடெண்டும் சட்ட அறிஞருமாகிய திருவாளர் எஸ். இராமச்சந்திரன் சேர்வை பி. ஏ. பி. எல். அவர்கள் திறந்து வைப்பார்

அச்சமயம், சமூக முன்னேற்றம், சுயமரியாதை இயக்கம், மக்களும் சடங்குகளும், வேதசாஸ்திர இதிகாச புராணப்பாட்டு, தீண்டாமை என்பவைகளைப்பற்றி பல பெரியோர்கள் அரிய பெரிய சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

பள்ளியபாளையம் பள்ளிக்கூட திறப்புவிழா

சேலம் ஜில்லா பள்ளிபபாளையத்தில் ஹையர் எலிமெண்டெரி ஆண் பெண் பாடசாலைகளுக்காக திரு. ஆறுமுகம் செட்டியார் அவர்களால் வாடகைக்காக கட்டிக்கொடுக்கப்பட்ட புதிய கட்டிட திறப்பு விழா, 1-12-28 தேதி சனிக்கிழமை திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தலைமையில் நடந்தேறியது. திரு. நாயக்கரும் திரு ஈஸ்வரனும் காலை 8-மணிக்கு ஈரோட்டிலிருந்து அழைத்து வரப்பட்டு பரிசலில் ஆற்றைக்கடந்து மேளதாளத்துடன் மோட்டாரில் ஊர்வலமாக புதிய கட்டிடத்திற்கு ஏராளமான ஆண்கள் பெண்கள் மாணாக்கர்கள் சூழ அழைத்துச் செல்லப்பட்டார்கள். தலைமை உபாத்தியாயர்களால் தலைவருக்கு வரவேற்பும் பள்ளிக்கூட சரித்திர அறிக்கையும் அளிக்கப்பட்டபிறகு, பெண்கள் கும்மி கோலாட்டம் முதலியவைகள் நடந்தன திரு. நாயக்கரால் "ஷண்முகாஸ்கவுட் சங்கம்" என்பதாக ஒரு புதிய சங்கமும் திறப்புவிழா செய்யப்பட்டது. முடிவில் திரு. நாயக்கர் பள்ளி, கல்வி என்பனபற்றிப்பேசியபிறகு, திரு. ஆறுமுகம் செட்டியாரால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டுசந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது.

வந்தனத்துடன் வரப்பெற்றோம்.

1929-ஆம் காலண்டர்கள்:— நாகர் கோயில் பிரிமயர் நியூஸ் ஏஜன்ஸி கம்பெனியார், தமது ஞாபகார்த்தமாக அழகிய இரண்டு காலண்டர்களை அன்பு கூர்ந்து அனுப்பியுள்ளார்கள். அவைகளில் ஐரோப்பிய மாதர்களினதும் பாலர்களினதும் இரு உருவப் படங்கள் கண்களைக் கவர்கின்றன. ஷை காலண்டர்களை எமது மனமார்ந்த வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம்.

திருக்குறள் 4 அணா பதிப்பு அறிவிப்பு.

சென்றவாரம் 2—12—28ல் தவறுதலாய் "குடி அரசில்" விளம்பரம் வெளிவந்துவிட்டது. இதுவரையில் முன் பணம் அனுப்பினவர்களின் பெயர்கள் ஒழுங்காக பதிவுசெய்யப்பட்டுஇருக்கின்றன. அவர்களுக்கு பொங்கல் புது நாளன்று புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும்.

பல நண்பர்கள் விளம்பரத்தை சரியாக கவனிக்காமல் இன்னும் பணம் அனுப்பிக்கொண்டிருககிறார்கள். டிசம்பர் 9 தேதிக்கு மேல் வரும் ஆர்டர்கள் ராப்பர் பைண்டு 8 அணா விதமும காலிகோ 12 அணா விதமும தான் பதிவு செய்து கொள்ளப்படும். அல்லது பணம் திருப்பி அனுப்பப்படும்.

நாம் எதிர் பார்த்ததற்கு மேல் (சுமார் 4000 பிரதிகளுக்கு மேல்) முன் பணமனுப்பியுள்ளார்கள். பல பெருந் திருவாளர்கள் 100, 200 புத்தகங்களுக்கு முன் பணமனுப்பி ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்க ஏற்பாடுசெய்துள்ளார்கள். இவ்வாறு எமது முதல் முயற்சிக்கு வியக்கத்தக்கவாறு ஊக்கமளித்த தமிழபிமானிகளுக்கும் பெருந் திருவாளர்களுக்கும் எனது தாழ்மையான வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

அடுத்தபடியாக இதே மாதிரி குறைந்த விலையில் வெளி வரப்போகும் பழந்தமிழ் நூல்களையும் ஆதரித்து ஏழை மக்களுக்கு நூல் கிடைக்குமாறு செய்ய தாழ்மையாக இறைஞ்சுகிறேன்.

வணக்கமுள்ள ஊழியன்,

த. குப்புசாமி

வளர்பபாளன், தமிழ் நூற்பதிப்புக்கழகம்,
காஞ்சீபுரம்.

குறிப்பு:- பல அன்பர்கள் விளம்பரத்தைச் சரியாகப்படித்துப் பார்க்காமல் பணம் அனுப்பிஉடனே புத்தகம் அனுப்புமாறுஎழுதுகிறார்கள். புத்தகத்திற்கு ஒரு சிறிதும லாபமின்மையால் அவ்வன்பர்களுக்கு பதில் எழுத முடியாமைக்கு வருந்துகிறேன். இன்னும் சில நண்பர்கள் புத்தகங்களை V. P. யில் அனுப்புமாறு எழுதுகிறார்கள். இவ்வன்பர்கள் ராப்பர் பைண்டு 8 அணாவும காலிகோ 12 அணாவும் தபால் செலவும் ஒத்துக்கொண்டு V. P. யில் அனுப்புமாறு கடிதம் எழுதினால் மட்டும் புத்தகம் இருக்கிறவரையில் அனுப்பி வைக்கப்படும்-

திருவாளர்கள் மு. சு. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள் 1-ரூபாயும், அருணாசலம் அவர்கள் 5 ரூபாயும் அனுப்பியுள்ளார்கள். மணியார்டர் கூப்பனில்இப்பெரியார்களது இருப்பிடம் ஒன்றும் காணவில்லை. தயவுசெய்து அவைகளை தெரிவிக்குமாறு வேண்டுகிறேன் பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுங்காணே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஞூ கார்த்திகை-மீ 24-உ

பிரம்மஞான சங்கமும் பார்ப்பனரல்லாதாரும்.

உலகத்திலுள்ள மக்கள் மனித சக்தியை உணராததற்கும், அறிவின் அற்புகத்தின் கரை காணாததற்கும் பல்வேறு பிரிவுகளாய்ப் பிரித்து ஒற்றுமையை கெடுத்திருப்பதற்கும், சுயநலம் பிறநல அலக்ஷியம, துவேஷம் முதலியவைகள் ஏற்பட்டு பரோபகாரம், இரக்கம், அன்பு முதலியவைகள் அருகிப்போனதற்கும், இயற்கை இன்பங்களும் சுதந்திர உரிமைகளும் மாறி துக்கத்தையும் நிபந்தனை அற்ற அடிமைத் தனத்தையும் இன்பமாகவும் சுதந்திரமாகவும் நினைத்துக் கொள்ள வேண்டியதான நிர்ப்பந்தமுள்ள செயற்கை இன்பத்தையும் சுதந்திரத்தையும் அனுபவித்துக்கொண்டிருக்க வேண்டியதற்கும் முக்கிய காரணம் மதங்கள் என்பதே எமது அபிப்பிராயம்.

இந்த மதங்களேதான் மக்களுக்கு கொடுங்கோன்மையான ஆட்சியை ஏற்படுத்துவதற்கும் காரணமாயிருந்ததென்றுகூடசொல்லவேண்டியிருக்கிறது.

உலகத்தில் பல காரணங்களால் ஏற்படும் பூகம்பம், எரிமலைக் குழம்பு, பூமிப்பிளவு, மண்மாரி, மழை, வெள்ளம், புயல்காற்று, இடி, மின்னல் ஆகியவைகள் போலவும், காலரா, பிளேக்கு முதலிய ரோகங்கள் போலவும் மனித சமூக வீழ்ச்சிக்கு அடிக்கடி வேறு வேறு வேஷத்தின் பேரால் மதங்கள் என்பவைகளும் தோன்றிக்கொண்டே வருவதுமுண்டு.

இம்மதக் கேடுகளை உணர்ந்த அனேகரும் உண்மையிலேயே அக்கெடுதல்களை ஒழிப்பதற்கென்று வேலைசெய்தவர்கள் அநேகரும் அந்த மதத்தை அப்படியே வைத்துக் கொண்டு கொள்கைகளுக்கு வேறு வித வியாக்கியானம் செய்தும்,மற்றும் அம்மதத்திற்கு வேறு கொள்கைகளைப் புகுத்தியும், மற்றும் வேறு மதத்தை ஏற்படுத்தி பழய கொள்கைகளையே வேறு ரூபத்தில் வைக்கும் பலவித மாய வேலை செய்தும் வந்து ஒரு விதத்திலும் வெற்றி பெறாமல் பழய நிலையிலேயே இருந்திருக்கின்றார்கள்.

மற்றும்சிலர் சுயநலம் கொண்டு தங்கள் சமூக உயர்வுக்கும் வகுப்பு ஆதிக்கத்திற்கும் ஆதாரமாக சூழ்ச்சிகள் செய்து மக்களை ஏமாற்றி பல தந்திரங்கள் மூலம் பழய கொள்கைகளையே நிலைநிறுத்தி வஞ்சித்து வருகின்றார்கள். இந்த இரண்டிற்கும் தோற்றத்தில் வித்தியாசமிருந்தாலும் காரியத்தில் ஒரே பலனைத்தான் கொடுத்து வந்திருக்கின்றன.

இந்த நிலையிலேயே, அதாவது மக்களை அறியாமையில் ஆழ்த்தவும் சிலரின் ஆதிக்கத்தை வலுப்படுத்தவுமாக இது சமயம் நமது நாட்டில், சிறப்பாக தமிழ் நாட்டில், கற்றறிந்த கூட்டத்தார் என்னும் பார்ப்பனர துஉதவி கொண்டு ஒருவாறு நாட்டில் உலவுகின்ற புதிய மத தோற்றங்களில் பிரம்மஞான சங்கம் அல்லது தியசாபிகல் சொசைட்டி என்பதும்ஒன்று. அது தலைமைப்பேராசையும்கீர்த்தி வெறியும்கொண்ட ஒருஐரோப்பிய மாதின் ஆதிக்கத்திலும்வெள்ளைக்காரர்களின்பண வலிமையிலும்ஒருவாறு செல்வாக்குப் பெற்று உலவுவதுடன் ஏற்கனவேபல காரணங்களால் உயர்வு தாழ்வுக் கொள்கையால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மூடநம்பிக்கையால் அறிவு வளர்ச்சி பெறாத மக்களுக்கும் பெரிதும் இடையூறாக தோன்றி இருக்கின்றது என்று நாம் சொல்ல வேண்டும். இச்சபை செல்வமும் செல்வாக்கும் கொண்ட ஒரு ஸ்தாபனமாயிருப்பதால் மேல் கண்ட இரண்டிலும் ஆசையுடையவர்களான பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்திற்கு இதை ஒரு சாதனமாய் உபயோகித்துக்கொள்ளக்கருதி ஒருவாறு அதில் போய் குவிந்து கொள்ளுகிறார்கள்- அதனால் பலனும் அடைந்து வருகின்றார்கள்.

நிற்க, இதன் கொள்கைகள் என்ன என்று பார்ப்போமானால்,சத்தியம் சகோதரத் தன்மை ஆகியவைகள் முக்கியமானவையாம்.

அன்றியும் கடவுள்கள், ராம, கிருஷ்ணாதி அவதாரங்கள், தேவர்கள், மகாத்மாக்கள், தேவாத்மாக்கள், உலகத்தை ரக்ஷிக்க உலக குரு தோன்றப்போகிறார் என்பது, மகாத்மாக்களுடனும் தேவர்களுடனும் சம்பாஷணை நடத்துவது என்பது, புராணம், இதிகாசம், கீதை ஆகியவைகளில் சிலவற்றை முழுதும் சிலவற்றை ஒரு அளவுக்கும் ஒப்புக்கொள்வது, முன் ஜன்மம், அதன் நடவடிக்கைகளை அறிவது, மற்றும் இதுபோன்றவைகளில் நம்பிக்கையுடையவர்களும் இதை நேரில் தினம் அனுபவிக்கின்றவர்கள் என்பவர்களும் இம்மதஸ்தாபகர்கள் என்று சொல்லப்படுகின்றது.

ஆனால், காரியத்தில் இவர்கள் நடவடிக்கை எப்படிப்பட்டது என்று பார்க்கவேண்டுமானால், அதை இந்த சங்கத்தில் சேர்ந்து இருக்கும் நபர்களைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். இதில் சேர்ந்திருப்பவர்களில் பார்ப்பனர்களே முக்கியமானவர்கள். அதிலும் வருணாசிரமக்காரரும் வேதசாஸ்திர இதிகாச புராண முதலியவைகளில் நம்பிக்கையும் பக்தியும் உடையவர்களாம். அவர்கள் நடவடிக்கைகளை கவனிப்போமானால் பேச்சுக்கும் நடவடிக்கைக்கும் சிறிதும்சம்பந்தமற்றவர்கள் என்பதும் மக்களை ஏய்க்க வெளியில் ஒரு கொள்கையும் தங்கள் ஆதிக்கத்துக்கு உள்ளுக்குள் ஒரு கொள்கையும் உடையவர்கள் என்பதும் விளங்காமல் போகாது.

சுமார் இரண்டு வருஷத்திற்கு முன்பாக திருநெல்வேலியில் கூட்டப்பட்ட திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட “எல்லா இந்துக்களுக்கும்கோவில் பிரவேசம் கொடுக்கவேண்டும்” என்கின்ற தீர்மானத்தை உரமாய் எதிர்த்தவர் பிரம்மஞான சங்கத்தில் அதிக பக்தியும் நம்பிக்கையும் பற்றுதலும் உடையவரான நண்பர் திருவாளர் நெல்லையப்ப பிள்ளையே ஆவார்கள். அவர்கள் சொன்ன ஆட்சேபம் என்னவென்றால்,

“ஆதிதிராவிடர்கள் முதலியவர்கள் அசுத்தமுள்ளவர்களான தால்கடவுளின் அருகில் செல்லவோ பூஜை முதலியவைகள் புரியவோ அருகதை அற்றவர்கள்” என்றும் கடவுளின் அருகில் அவர்களை செல்லவிடக்கூடாது என்றும் சொன்னார்கள். அதை ஆக்ஷேபித்து அவ்வூர் பிரபல சைவ மக்களும் சைவ தேசிகர்களும் தக்க காரணம் காட்டி மறுத்தார்கள். முடிவில் ஓட்டு எடுக்கும்போது பிரமஞான சங்கத்தைச் சேர்ந்த பிரபலஸ்தான திருவாளர் பென்ஷன் தாசில்தார் நெல்லையப்பபிள்ளை அவர்கள் ஒருவர் மாத்திரமே எதிரிடையாக கைதூக்கினார். இந்த விஷயத்தில் அச்சங்கத்தின் ஏக தலைவரான ஸ்ரீமதி பெசண்டம்மாள் அவர்களும் அதே அபிப்பிராயத்தையே சொல்லி இருக்கின்றார்கள். அதாவது,

‘ஆதிதிராவிடர் முதலியவர்கள் பரிசுத்த மற்றவர்களானதால்– அவர்கள தீண்டப்படாதவர்கள் ஆனார்கள்’ என்று சொன்னார்.

அதுமாத்திரமல்லாமல் இவர்கள் சமீபத்தில் காசியில் பல்கலைக் கழகத்தில் மாணாக்கர்களின் முன்பு பேசிய காலத்தில் ஜாதிப்பிரிவுகளை அதாவது வருணாசிரமத்தை ஆதரித்து ‘தேச நன்மையை உத்தேசித்து அது அவசியம்’ என்றும் பேசியிருக்கின்றார்கள்.

ஆகவே வருணாசிரம தர்மமும் தீண்டாமையும் ஆதரி[illegible] ஒரு ஸ்தாபனத்தால் நாட்டுக்கு [illegible] விதத்தில் சகோதரத் தன்மையும் ஒற்றுமையும் அன்பும் சத்தியமும் உண்டாக்கக்கூடும் என்பதை அறிவாளிகள் யோசித்துப் பார்க்கவேண்டுமாய் விரும்புகின்றோம்.

மற்றப்படி இந்தஸ்தாபனத்தில் நடைபெறும் மற்ற விஷயங்களை நாம் இந்த வியாசத்தில் புகுத்த இஷ்டப்படவில்லை. ஆதலால் அதைப்பற்றிநாம் எழுதவரவில்லை. அரசியல் துறையில் பார்ப்பனரல்லாதார்களுக்கு இந்த சங்கத்திலுள்ள வருணாசிரமப் பார்ப்பனர்களின் தொல்லையும் வகுப்பு ஆதிக்கப் பேராசையும் தலைவியால் பார்ப்பனரல்லாதார்களுக்கு ஏற்படும் கொடுமையும் அளவிடற்பாலதல்ல.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், பிரம்மஞானசங்கம் என்பது, ஆரிய தர்மப்பிரசாரம், வருணாசிரம தர்மபரிபாலனம், பிராமண மகா சபை என்பனபோன்ற பார்ப்பன

சென்னை
தென் இந்திய சீர்திருத்தக்காரர்கள் மகாநாட்டு அக்கிராசனர்
திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரின் முடிவுரைப் பிரசங்கம்.

சகோதரர்களே! சகோதரிகளே!

நமது மகாநாட்டின் நடவடிக்கைகள் எல்லாம் அநேகமாய் முடிவுபெற்றுவிட்டன. மகாநாடுகளின் வழக்கப்படி பார்த்தால் மகாநாட்டு தலைவர் என்கின்ற முறையில் எனது முடிவுரை என்பதாக சில வார்த்தைகளையாவது நான் சொல்லியாகவேண்டும். நீங்களும் அதை குறிப்பாய் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை உணருகிறேன். மகாநாட்டு நடவடிக்கைகளில ஆதிமுதல் இதுவரை ஊக்கத்தோடும் உணர்ச்சியோடும் இடையரூக் கவனத்தோடும் கலந்திருந்த உங்களுக்கு இனி நான் அதிகமாய் ஒன்றையும் சொல்லவேண்டியதில்லையென்றே நினைக்கின்றேன். ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே சீர்திருத்தம் என்பதைப்பற்றி பேசப்பட்டு வருகிறதாய் அறியக்கிடக்கின்றது. எவ்வித சீர்திருத்தத்தைப்பற்றி பேசப்பட்டு வந்ததோ அது ஒரு சிறிதும் காரியத்தில் வெற்றிபெறவில்லை.

சீர்திருத்தக்காரர்களும் தங்கள் சீர்திருத்தங்களைப்பற்றி வாயளவில் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்களேயொழிய காரியத்தில் கொண்டுவருவதில் வெற்றியடையவே இல்லை. ஆனாலும் இப்போதும் அம்மாதிரியாகவேதான் வாய்ப்பேச்சிலும் வெறும் தீர்மானத்திலும் நடைபெறுகின்றதேயொழிய காரியத்தில் நடைபெறச்செய்யும் மார்க்கத்திற்கு கொண்டுபோய்விடும்படியான சீர்திருத்தம் செய்வதற்கு ஆட்களைக் காணோம்.

இந்தமாதிரியான வாய்ப்பேச்சு சீர்திருத்தத்திற்கும் எதிர்ப்புச் சீர்திருத்தங்கள் வெளிப்படையாயும் மறைமுகமாயும் சூட்சியாயும் நடந்துகொண்டே வந்திருக்கின்றன. இன்றையதினமும் பல இடங்களில் நடந்துகொண்டிருக்கின்றது. அவைகளில் ஒன்று தான் அரசியல் இயக்கம் என்பதும் திரு காந்தியின் வருணாச்சிரமப் பிரசாரம் என்பதும், மற்றும் வருணாசிரம தர்ம பரிபாலன மகாநாடு, பிராமண மகாநாடு, இந்துமகாநாடு, ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு, சைவசித்தாந்த மகாநாடு, வைணவ சித்தாந்த மகாநாடு, ஆஸ்திகர்கள் மகாநாடு என்று சொல்லப்படுபவைகள் போன்றவைகளும், ராமாயணம், பாரதம், பாகவதம் பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் முதலிய புராண இதிகாச காலக்ஷேபங்களும், வேத சாஸ்திரப்புராணப் பாடசாலைகள் முதலியவைகளும், இவைகளுக்கு அடிக்கடி பாஷியங்கள் கிளப்புவது முதலியவைகளுமாகும்.

ஆதலால் வெறும் சீர்திருத்தங்கள் எப்பேர்ப்பட்ட வீரர்களால் செய்யப்படினும் அவைகளை மேற்கண்ட கறையான்கள் அடியோடு அழித்துக்கொண்டே வந்துவிடுமேயொழிய ஒரு சிறு பாகத்தையும் மீதியிருக்க விடாது என்பதை தயவுசெய்து உணருங்கள். உண்மையான சீர்திருத்தத்தை நமது நாட்டிற்கு விரும்புபவர்கள் முதலில் மேற்கண்ட புல்லுருவிகளையும் கறையான்களையும் அழிக்க தைரியமாய் முற்படவேண்டும். பழக்க வழக்கம் என்கின்ற பிசாசுகளை முதலில் ஓட்டிவிடவேண்டும். பழக்க வழக்கங்களை விடவேண்டுமானால் மனிதன் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்க தயாராயிருக்கவேண்டும். அப்படி பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுப்பவர்கள் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. எழுதிவைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. வெகுகாலமாக நடந்துவருவதாக தெரியவருவதினாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. அநேகர்பின்பற்றுவதாலேயே நம்பிவிடக்கூடாது. கடவுளாலோ மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே நம்பிவிடக்கூடாது. ஏதாவதொரு விஷயம் நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய் தோன்றுவதாலேயே அதை தெய்வீகம் என்றோ மந்திரசக்தி என்றோ நம்பிவிடக்கூடாது. எப்படிப்பட்ட விஷயமானாலும் நடுநிலைமையில் இருந்து பகுத்தறிவிற்கு தாராளமாய் விட்டு ஆலோசிக்கத் தயாராயிருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் கண்மூடித்தனமான பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழிக்கமுடியும்.

அப்படிக்கில்லாமல் "எதையும் நம்பித்தானாக வேண்டும்" "பெரியவர்கள் நடந்தபடிதான் நடக்கவேண்டும்" என்று நினைப்போமானால் எதை நம்புவது? யார்சொன்னது சரி? யார் சொன்னது தப்பு? எந்த எந்த புஸ்தகம் கடவுள் சொன்னது? அதில் எதெது மத்தியில் மனிதனால் நுழைக்கப்பட்டது? அவைகளில் அறிவாளிகளுக்கு எழுதியது எது? புத்தியில்லாத பாமர மக்களுக்கு எழுதியது எது? பெரியவர்கள் யார்? என்கின்றவைபோன்ற விஷயங்களுக்கு சமாதானம் எங்கே இருக்கிறது? நமது சீர்திருத்த வேலையின் ஜீவநாடி இந்த இடத்தில்தான் இருக்கிறது. இங்குதான் மனிதன் தைரியமாயும் உறுதியாயுமிருக்கவேண்டும்.

தவிர சீர்திருத்தங்களைப்பற்றி பிரசாரம் செய்வதன் மூலம் மக்களுக்கு எடுத்துச்சொல்லி முழுவதையும் சரிப்படுத்திவிடலாம் என்று எண்ணுவதும் மிகுதியும் பைத்தியக்காரத்தனமாகும்.

ஏனெனில் நமது பிரசாரத்தை செய்வதற்கு நமக்குள்ள சந்தர்ப்பத்தைக்காட்டிலும் நமது சீர்திருத்தத்திற்கு எதிரிகளான வைதீகர்கள், பண்டிதர்கள் சுயநலப் பார்ப்பனர்கள், அவர்களது கூலிகள் ஆகியவர்களுக்கே மிகுதியும் சந்தர்ப்பங்களும் சவுகரியங்களும் அதிகமாய் இருக்கின்றன, எப்படியெனில் கோவில்கள், புராணங்கள் சித்திரப்படங்கள் ஆகியவைகளும் அவைகளின் உற்சவம், காலக்ஷேபம், பஜனை ஆகியவைகளும் பழக்கம், வழக்கம், நடை, உடை, பாவனை சம்பிரதாயம் ஆகியவைகளும், பள்ளிக்கூடம், படிப்பு, பாடபுஸ்தகம் முதலியவைகளும் யாருடைய பிரயத்தனமும் இல்லாமல் மக்களுக்குள் சீர்திருத்தத்திற்கு விரோதமான விஷத்தை புகுத்திவிடுகின்றன. இது தவிர கோடிக்கணக்கானரூபாய்கள் வருவாய்கொண்ட மடங்களும் மடாதிபதிகளும் ஸ்தாபனங்களும் வெட்டி ஆட்களும் இருக்கின்றன.

அன்றியும் ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் பெற்று அதன் மூலம் பிரதிநிதிகள் தெரிந்தெடுத்து அவர்களால் சட்டங்கள்செய்து முழு சீர்திருத்தங்களையும் செய்துவிடலாம் என்று எண்ணுவதும் அறியாமையே ஆகும். ஏனெனில் ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் என்பது பெரிதும் பாமர மக்களிடையே இருக்கின்றது. பிரதிநிதிகளாக வருபவர்களும் பெரிதும் சீர்திருத்த விரோதிகளுக்கு பயந்தவர்களும்சரியான சீர்திருத்த அறிவில்லாதவர்களாகவுமே இருக்கிறார்கள்.

சர்க்காரும் நம்முடைய கேவல நிலையினால் வாழவேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள். ஆதலால் உண்மையானதும் முடிவானதுமான சீர்திருத்தம் ஒரு நாட்டிற்கு வரவேண்டுமானால் ஏகசக்ராதிபத்தியத்தன்மைகொண்டஒருவீரனின் ஆட்சியால் தான் முடியும். அதாவது 'இந்தப் பொதுக் கோவிலுக்குள் எல்லோருக்கும் செல்ல உரிமை உண்டு' என்று விளம்பரம் செய்யவேண்டும். யாராவது ஆக்ஷேபித்தால் அவர்களை சிறையிலிடவேண்டும். இதை பொது ஜனங்கள் கூட்டம் போட்டு கண்டிக்க ஆரம்பித்தார்களானால் உடனே கோவிலை இடித்தெறிந்துவிடவேண்டும்.

ஜாதி வித்தியாசமோ உயர்வு தாழ்வோ கற்பிக்கின்ற புஸ்தகங்களை படிக்கக்கூடாது என்று சொல்லிவிட வேண்டும் . மீறி படிக்க ஆரம்பித்தால் அவற்றை பறிமுதல் செய்யவேண்டும். உயர்வு தாழ்வு வித்தியாசம் முதலியவைகொண்ட மடாதிபதிகளை எல்லாம் சிறையில் அடைத்துவிடவேண்டும். பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்தால் மடாதிபதிகளை தீவாந்திரத்திற்கு அனுப்பிவிடவேண்டும். சுவாமிகளுக்கு உள்ள நகைகள் வாகனங்கள் பூமிகள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்து அவைகளை விற்று படிப்பில்லாதவர்களுக்கு படிப்பும் தொழில் இல்லாதவர்களுக்கு தொழிலும் ஜீவனமும் ஏற்படுத்த உபயோகப்படுத்திவிடவேண்டும்.

இதுபோன்ற காரியங்கள் செய்யத்தக்க உரம் கொண்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவரவேண்டும். அப்பேர்ப்பட்ட வீரர்களின் ஆட்சிக்குட்பட்ட நாடுகள்தான் இன்று சுயமரியாதையும் சீர்திருத்தமும் பொலிந்து விளங்குகின்றன.

இப்பேர்பட்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டுவரவேண்டுமானால் அநேக சீர்திருத்தக்காரர்கள் உயிர் துறக்கத்தயாராயிருந்துகொண்டு பாமரமக்களிடையில் உண்மையைப்பரப்ப முன்வரவேண்டும். நம்நாட்டுப்பார்ப்பனர்கள் நம் சீர்திருத்தங்களை எதிர்க்க வெளியில் வருவதில்லை. ஒரு விதத்தில்ஒளிந்துகொண்டார்கள். ஆனாலும் நம்மவர்களிலேயே சில கூலிகளையும் ஏமாந்த சோணகிரிகளையும் பிடித்து அவர்களை நம்மீதுஏவிவிட்டு தடைவேலை செய்யச்செய்துவிட்டு தங்களுக்குள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் செய்துகொள்ள வர்

திக்க பிரசார சபைகளில் ஒன்றேயொழிய வேறல்ல, அதில் மேல் கண்ட சபைகளாவது வெளிப்படையாய் நம்முடன் போர் புரிகின்றன என்று ஒருவாறு சொல்லலாம். ஆனால் இந்த பிரம்மஞான சங்கம் என்பதோ சூழ்ச்சியின் மூலம் நம்மை கழுத்தறுத்து வருகின்றது. ஆதலால் பார்ப்பனால்லாதார் பிரம்மஞான சங்கத்தில் சேருவது தற்கொலைத் தன்மை பொருந்தியது என்றே சொல்லுவோம்.

சமத்துவக்கொள்கையை அழித்துபார்ப்பனீயத்தைப்புகுத்த திருஞானசம்பந்தர் என்ற பார்ப்பனர் உதித்து "சைவத்தைக்காப்பாற்றிய கதை"யைப்போலவே நமது பார்ப்பனால்லாதார் இயக்கத்தை அழித்துபார்ப்பனீயத்தை பரப்ப பெசண்டம்மை என்னும் 'லோகமாதா' வந்துபிரம்மஞானசங்கத்தால் "மக்களுக்கு பிரம்மஞானம் புகட்டுகின்றார்" என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு சமயம் அந்த ஸ்தாபனத்திற்கு ஏற்பட்டிருக்கிற செல்வாக்கால் தங்களது சுயநலத்திற்குஏதாவது வழி செய்து கொள்ளலாம் என்கருதி பார்ப்பனால்லாதாரில் சிலர் அதில் சேருவதானாலும் சுயமரியாதைக் கொள்கையை ஒப்புக்கொள்ளுபவர்கள் அதில் கலந்துகொள்ளுவது சிறிதும் பொருந்தாததாகும். அதில் உள்ளவர்களில் பெரும்பான்மையோர்களின் மனப்பான்மையையும் முக்கியஸ்தர்களில் தனித்தனி நபர்களின் மனப்பான்மையையும் அறிந்தே நாம் இந்தப்படி எழுதுகின்றோம், மற்றொரு சமயம் இதைப்பற்றி விரிவாய் எழுதுவோம்,

ஞசிரம தர்ம மகாநாடு, ஆரியதர்ம பரிபாலன மகாநாடு, பிராமணர்கள் மகாசபை, சனாதன தர்மிகள் மகாநாடு, வேதவித்துக்கள் மகாநாடு, புரோகிதர்கள் மகாநாடு, பண்டிதர்கள் சாஸ்திரிகள் கனபாடிகள் சம்மேளனம் ஆகிய பல மகாநாடுகள் திருட்டுத்தனமாகவும் சூழ்ச்சியாகவும் கூட்டி அதற்குள் பல இரகசிய தீர்மானங்கள் செய்து இரகசிய சமாச்சாரப் போக்குவரத்து மூலம் தெரிவித்துக் கொண்டு கட்டுப்பாடாய் வேலைசெய்து வருகிறார்கள்.

இவ்வளவும் செய்துவிட்டு சீர்திருத்த இயக்கத்திற்கு நாஸ்திக இயக்கம் என்ற பெயரைக்கொடுத்து அதற்கு பலதப்பர்த்தங்களையும் பழிப்புகளையும் கற்பித்தும் வருகிறார்கள். இதைசில பார்ப்பனரல்லாதார்களும் நம்பிக்கொண்டு அர்த்தமில்லாமல் குற்றம் சொல்லுகின்றார்கள். ஆனாலும் சீர்திருத்தக்காரர்கள் என்பவர்கள் நாஸ்திகமதம் என்கின்ற பூச்சாண்டிக்கு பயப்படக்கூடாது. அது ஒரு அர்த்தமற்ற வார்த்தை. அதன் உண்மை அர்த்தமும் உண்மைப் பிரயோகமும் என்னவென்றால் "பார்ப்பனீயத்தில் அதாவது பார்ப்பனர்களுடைய வேதம் சாஸ்திரம் இதிகாசம் புராணம் ஆகியவைகளில் நம்பிக்கை யில்லாதவன், பார்ப்பனர்களின் புரட்டுக்களைக் கண்டுபிடித்து வெளிப்படுகின்றவன்" என்பதுதான். இந்நிலையில்நாம் எல்லோரும் நல்ல உறுதியான நாஸ்திகர்களேயாவோம். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் தைரியமாய் நம்மை நாஸ்திகர்என்றே சொல்லிக்கொள்ள வேண்டும். சீர்திருத்தக்காரர்கள் தங்களுடைய பெயரின் இறுதியில் நாஸ்திகன் என்ற பட்டத்தையே சேர்த்துக்கொள்ளவேண்டும். அப்போதுதான் நாஸ்திகப்பூச்சாண்டியை கொல்லமுடியும்.

நமக்கும் வேதத்திற்கும் என்ன சம்மந்தம்? அதை யார் உண்டாக்கினவர்கள்? யாருக்காக உண்டாக்கப்பட்டது? என்னபாஷையில் செய்யப்பட்டது? அதில் நமது நிலைமை என்ன? என்பவைகளாகிய விஷயங்களை யோசித்துப்பார்த்தால் அதை நம்பலாமா? நாம் ஒப்புக்கொள்ளலாமா? அது நமது மக்களிடை பரவுவதற்கோ இருப்பதற்கோ இடம் கொடுக்கலாமா? என்பது விளங்கும்.

கடைசியாக சீர்திருத்தக்காரர்களுக்கு ஒரு எச்சரிக்கைசெய்ய விரும்புகின்றேன்.

மதவெறியும் சமயவெறியும் பிடித்தவர்களும் பொதுவாக பார்ப்பனர்களும் சமத்துவம் சுதந்திரம் சுயமரியாதை பகுத்தறிவு ஆகியவைகள் கொண்ட சீர்திருத்தத்திற்கு எப்போதுமே விரோதிகள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஒருவர் "எங்கள் மதத்தில்மேல்கண்ட சீர்திருத்தமுண்டு" என்பார் "ஆனால் எங்களைப்போல் வேஷம்போட்டுக்கொள்ளவேண்டும், எங்கள் வேதத்தை நம்பவேண்டும், எங்கள் சாமியையும் தூதனையும் வணங்கவேண்டும்" என்று சொல்லுவார்கள். மற்றொருவர் "எங்கள் சமயத்தில் சீர்திருத்தம் உண்டு, ஆனால் எங்களைப்போல் வேஷம்போட்டுக்கொண்டு எங்கள் சாமிகளையும் புராணங்களையும் நம்பவேண்டும்" என்பார்கள். நம்பாவிட்டால் "நாஸ்திகர், அஞ்ஞானி, பாவிகள்" சமயத்துவேஷி என்று சொல்லிவிடுவார்கள், இவர்கள் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் இவர்கள் உண்மை சீர்திருத்தத்திற்கு விரோதிகள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

முக்கிய எச்சரிக்கை என்னவென்றால், பார்ப்பனர்களில் சிலர் சீர்திருத்தக்காரர்கள் என்று சுலபத்தில் பட்டம்பெற்று புறப்பட்டு விடுவார்கள். அதாவது கள்ளும் சாராயமும் குடித்தால் அதனாலேயே அவர்ஒரு சீர்திருத்தக்காரர் ஆய்விடுவார்; ஒருவர் ஆடு மாடு பன்றி சாப்பிட்டால் அதனாலேயே அவர் ஒரு சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார்; மற்றொருவர் வெட்டிச்சோறாக யார் வீட்டிலும் கிடைத்ததையெல்லாம்சாப்பிட்டுவயிற்றை நிரப்பிக்கொண்டு திரிந்தால் அதனாலேயே அவர் ஒருபெரிய சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார்; மற்றொருவர் ஒழுக்கமில்லாமல் யாரையும் எந்தப்பெண்ணையும் கல்யாணமாகவோ வைப்பாட்டியாகவோ வேசியாகவோ அனுபவித்துக்கொண்டு திரிந்தால் அதனாலேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரராகி விடுவார்; ஜனங்களும் முட்டாள்தனமாக அவர்களை வித்தியாச மற்றவரென்றும் சீர்திருத்தக்காரரென்றும் நம்பிவிடுவார்கள். ஆனால் அவர்களால் சீர்திருத்தத்திற்குமாத்திரமன்றியில் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கேபெரிய ஆபத்து என்பதை மறந்துவிடாதீர்கள்.

மற்றும் எந்த விஷயத்திற்கும் சாமியையும் மதத்தையும் குறுக்கே கொண்டுவந்து போட்டுவிடுகின்றார்கள். ஆகவே உங்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக எந்த மதமாவது கடவுளாவது குறுக்கிட்டால் அவற்றைத் தைரியமாக எதிர்க்கவேண்டுமென்றே கேட்டுக்கொள்ளுகின்றேன். இனி பார்ப்பனர்கள் வித்தியாசம் காட்டுவதுடன் பார்ப்பனரல்லாதார்களுக்குள்ளும் பற்பல ஜாதியார் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டுகின்றனர். 'மேல் ஜாதியார்கள்' நீங்கள் உங்களுக்கு சமமாக இருக்கவேண்டுமென்று விரும்புவீர்களானால் உங்களுக்குக் 'கீழேயுள்ள ஜாதியார்' களுக்கும்நீங்கள்சமத்துவம் அளிக்கவேண்டும். நம்மிடமிருக்கும் கொடுமை பார்ப்பனர்கள்காட்டும்கொடுமைகளை விட சற்று அதிகம் என்றே சொல்லவேண்டும். ஆனால், நாம் பார்ப்பனர்களை ஏன் அதிகமாகச்சொல்லுகிறோமென்றால், அவர்கள்வைத்த தீ தான் நம்முடைய வீடுகளிலும் பிடித்து கொண்டது. நம்மேல் ஜாதிஎன்பாரோடு சண்டை செய்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்ற கொள்கையில் வெற்றி பெற்றால் கீழ் ஜாதியார்களென சொல்லப்படுகிறவர்களுக்கும் அவர்களுக்குரிய பங்கை நாம் கொடுக்கவேண்டும், சர்வ கட்சி மகாநாட்டுத் திட்டத்தில் எல்லா வகுப்பாருக்கும் சமத்வம் கொடுக்க வேண்டுமென்ற விஷயமே காணப்படவில்லை. பார்ப்பனர்களுக்குப் பயந்தே எல்லோரும் அதில் கையெழுத்துப் போட்டு விடுகிறார்கள். முதலில் எல்லாவகுப்பாருக்கும்சமத்துவம் கொடுப்பதைவிட வேறு என்ன சீர்திருத்தம் வேண்டுமென்று நினைக்கின்றீர்கள். பிச்சை எடுப்பதற்கு உபயோகமாயிருக்கும் வேதப் படிப்பிற்காக கொள்ளை கொள்ளையாக லாபம் சம்பாதிக்கும் நாட்டுக் கோட்டை செட்டிமார்கள் சோறும் போட்டு படிக்கும்படி செய்கிறார்கள். இம்மாதிரியான உதவி ஆதிதிராவிட பிள்ளைகளுக்கு அளிக்கப்படுமானால், அவர்களில்வயிற்றுப் பிழைப்பிற்கு வழியின்றி சிறு வயதிலேயே கூலிக்குச் செல்லும்எத்தனையோ பிள்ளைகள் பள்ளிக்கூடம் சென்றுபடித்து மந்திரி வேலைக்குத்தயாராக விருப்பார்களென்பதை நினைத்துப்பாருங்கள்.

இனி சிலர், வேதங்களும், புராணங்களும் பழங்கதையென்று சொல்லிக்கொண்டுபண்டிகை திதி திவசம் கிரகணம் ஆகியவைகள் வரும்போது அவர்கள் அப்புத்தகங்களையே முதலில் திறந்து பார்ப்பார்கள். ஆனால் அவர்களைக் கேட்டால் ஒழுக்கத்துக்கு விரோதமாக நடக்கலாமாவென்று கூறுகிறார்கள். இவர்களை எந்தக்கூட்டத்தில் சேர்ப்பது?

கடைசியாக சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுங்கங்கள் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும் ஜீவன்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும் சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப் படுத்தவுமே வேண்டும். ஆகையால் நீங்களெல்லோரும் இம் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களைத் தைரியமாக நடத்தையில்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன், என்று சொல்லிவிட்டு நிறைவேறிய தீர்மானங்களைப்பற்றி பேசினார். அவைகள் பின்னால் ஒரு சமயம் வெளியாகலாம்.

பின்பு தலைவருக்கும் ஏனையோர்களுக்கும் வந்தனம் கூறப்பட்டு மகாநாடு இரவு 9-30 மணிக்குக் கலைந்தது. பின் சமபந்தி போஜனம் நடைபெற்றது.

ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1926-ஹு O. S. No. 1788.
1928-ஹு E. P. R. No. 1130.
1928-ஹு E. A. No. 1601.
1928-ஹு E. A. No. 1613.

பாட்டே கவுண்டன்—வாதி.

பெரிய நாச்சியப்ப கவுண்டன் 1, சின்ன நாச்சியப்ப கவுண்டன் 2, கொளந்தாக் கவுண்டன் 3, ராமசாமி கவுண்டன் 4, நாராயண கவுண்டன் 5, [illegible] 6, செல்லப்ப கவுண்டன் 7, (இறந்தான்) வார்சு மக்கள் குமரர் நாச்சிமுத்து கவுண்டன் 8, மைனர் கொளந்தாக் கவுண்டன் 9 கார்டியன் தாயார் கருப்பக்காள்—பிரதிவாதிகள்.

ஷை நெம்பரில் வாதி அடமானப்பத்திரப்படி பிரதிவாதிகள் பேரில் டிக்கிரி பெற்று பிரதிவாதிகளுடைய ஸ்தாவர சொத்துக்கள் ஏலத்துக்கு கொண்டுவரப்பட்டு ஷை ஏலம் 17–12–28ல் போடப்பட்டிருப்பதால் ஷை ஏலத்தில் கோரும் மற்றவர்களுடன் வாதியும் ஏலத்தில் கோர அனுமதி கேட்பதால் பிரதிவாதிகள் தங்களுக்கு ஆக்ஷேபனையுண்டானால் 17-12-28-தேதிக்குள் தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

E. S. தண்டபாணி அய்யர்,
வாதி வக்கீல்.
7—12—28.

NOTICE.

உடுமலைப்பேட்டை

டி. மு. கோர்ட்டில்.

அசல் நெ. 873 of 1928,

வாதி:— கணபதி அம்மாள்.
பிரதிவாதி:—ஷை தாலூகா கணபதிபாளையம் நீர் கொண்டார் வெங்கிடசாமி நாயக்கன் மகன் நரசிம்மநாய்க்கன்.

ஷை நெம்பரில் வாதி புரோநோட்டுப்படி ரூ. 773—10—0க்கு தாவாசெய்து 2 தடவை கோர்ட்டு மூலம் சம்மன் அனுப்பியும் சர்வாகாததால் மறு சம்மனுக்குத்திரவாகி 20-12-1928ந் தேதியில் விசாரணை வாய்தா ஏற்பட்டிருக்கிறது. ஷை தேதியில் பகல் 11 மணிக்கு ஷை கோர்ட்டில் நேரிலாவது வக்கீல் மூலமாவது ஆஜராகி தகுந்த காரணம் காட்டாதவரை அவன்பேரில் ஒரு கக்ஷியாய் தீர்ப்புச்செய்யப்படும் என்ற விபரம் தெரிவித்திருக்கிறேன்.

U. S. வெங்கட்ரமண அய்யர்,
வாதி வக்கீல்.

தப்பிலி.

புதிய கட்டுரைகள் 12. ஆசிரியர்வாளுடைய வர்ணபடத்துடன் விலை அணா 10.

விலாசம்— மு. சு. பூர்ணலிங்கம் பிள்ளை,
முன்னீர்பள்ளம், திருநெல்வேலி ஜில்லா.

(8ம் பக்கத் தொடர்ச்சி.)

ல்லாமல் மற்றும் பல சமூகங்களும் இழிவு படுத்தப்பட்டிருக்கின்றதென்றும், நாயக்கர் முதலிய சமூகங்கள் கோவிலுக்குள் ஒரு அளவுக்கு போகலாமானாலும் அவர்களும் மேல்கண்ட அயோக்கிய கூட்டத்தினர்களால் தாசி மகன், வைப்பாட்டி மகன், அடிமை என்பது முதலிய பொருள் கொண்ட சூத்திரர்கள் என்று சொல்லப்படுகின்றார்கள் என்றும் திரு வ. வே. சு. அய்யர் போன்ற அரசியல் பார்ப்பனர்கள் கூட இக்சூழ்ச்சிக்காரர்களில் சேர்ந்தவரென்றும் சொன்னதுடன், வேண்டுமானால் அப்படிப்பட்ட பார்ப்பனர்களுடன் ஒத்துழையாமை செய்யலாமே யொழிய (அப்போதைய) 'காங்கிரசுடன் நாடார் மாத்திரமல்ல' வேறு எந்த சமூக யோக்கியனும் ஒத்துழையாமை செய்ய முடியாது என்றும் அப்படிச் செய்வதாயிருந்தால் (அப்போதைய) காங்கிரஸ் கொள்கைகளுக்குவிரோதமாகதீண்டாமையையும்மதுபானத்தையும் ஜாதிவித்தியாசத்தையும் ஆதரித்தாகவேண்டும் என்றும், அந்தப்படி நீங்கள் யாராவது ஆதரிக்கின்றீர்களா என்றும் நாடார்களைப் பார்த்துக் கேட்டதும், அது சமயமும் சிலர் உண்மையறியாமல் நாயக்கர் மீது சீறி விழுந்து கண்டனத்தீர்மானங்கள் முதலியவைகள் செய்ய முற்பட்டு தோல்வி அடைந்ததும் ஞாபகமிருக்கலாம்.

மற்றும் ஒரு சமயம் இந்த திரு வரதாராஜுலுவே ஒரு கூட்டத்தில் பேச நேர்ந்த போது, நாடார் சமூகம் தாழ்த்தப்பட்டதற்கு நாயுடு சமஸ்தானங்களே காரணம் என்றும் அதற்காக நாயுடு சமூகத்தின் சார்பாக தாம் மன்னிப்புகேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்து நாடார்கள் விஷயத்தில் திருப்பூர் மகாநாட்டில் நடந்து கொண்ட தப்பிதத்தை மாற்றிக்கொள்ள முயற்சித்ததும், இதை அறிந்து சென்னை ஸ்ரீமதி அலமேலு மங்கைத் தாயாரம்மாள் திரு. நாயுடுவின இந்த மாதிரியான வார்த்தைகளை மறுத்து பத்திரிகைகளில் எழுதி திரு. வரதராஜுலுவை கண்டித்தும் யாவருக்கும் தெரிந்த விஷயமேயாகும். இந்த நிலையில் திரு வரதராஜுலுவின் சூழ்ச்சியும் விஷமப் பிரசாரமும் நாடார் சமூகத்திலுள்ள ஏதோ சில அறியாத பிள்ளைகளிடம் மாத்திரம் செலாவணியாகுமேயொழிய அறிவுள்ள பொறுப்புள்ள மக்களிடம் ஒரு சிறிதும் செலாமணியாகாதென்பது உறுதி.

அன்றியும் இதுவரை திரு வரதராஜுலு தமது பேச்சுக்காகவும் எழுத்துக்காகவும் சுமார் 1008 தரம் மன்னிப்பு கேட்டிருப்பார். ஆனால் திரு நாயக்கர் இதுவரை தனது பேச்சுக்காகவோ நடவடிக்கைக்காகவோ யாதொருவிதமான மன்னிப்பும் எவரிடத்திலும் கேட்டுக்கொண்டதே கிடையாது என்பதை வாசகர்கள் ஞாபகப்படுத்திப் பார்த்தால் அவர் எவ்வளவு ஜாக்கிரதையுடன் பேசுபவர் எழுதுபவர்என்பதுவிளங்காமல் போகாது. சமீபத்தில் சென்னை திரு வேதாசலம் அவர்களை மன்னிப்பு கேட்டுக்கொள்வதாய் மாத்திரம் ஒரு வார்த்தை எழுதியிருந்தார். அதுவும்தம்முடைய நடவடிக்கைக்காகவோ அல்லது தமது எழுத்துக்காகவோ அல்ல என்பதும் தம் போல் மற்றவர்களால் நடந்த நடவடிக்கைகளை கண்டித்ததை உத்தேசித்து தம்மை தண்டித்துக்கொள்வதற்காக ஏற்பட்டது என்பதும் விளங்கும். காஞ்சிபுரம் மகாநாட்டின் போது கூட்டப்பட்ட மாகாண காங்கிரஸ் கமிட்டியின் போது அங்கு நடந்த ஒரு சூழ்ச்சிக்காக அக்கூட்டத்தில் சிலரை அயோக்கியர்கள் என்றும் இழி மக்கள் என்றும் சொல்லி கண்டித்த போது சில பார்ப்பனர்கள் அதாவது திருவாளர்கள் ஏ. ரங்கசாமி அய்யங்கார், சி. வி. வெங்கட்ரமணய்யங்கார், சத்தியமூர்த்தி முதலியவர்கள் எழுந்து தங்களை இப்படிச்சொன்னதற்காக திரு நாயக்கர் மன்னிப்பு கேட்டுக்கொள்ளவேண்டும் என்றும், இல்லாவிட்டால் அவரைக் கண்டிக்கவேண்டுமென்றும், இல்லாவிட்டால் தாங்கள் எழுந்து போய் விடுவதாகவும் பேசினார்கள். இந்த திரு வரதராஜுலுவும் மற்றொருவனும் அந்தப் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொண்டு நாயக்கர் மீதும் குற்றம் சுமத்தமுன்வந்தார்கள். திரு நாயக்கர் எழுந்துஇவற்றை லக்ஷியம் செய்யாமல் தான் சொன்னதை உறுதிப்படுத்தப்போவதாகவும்,இந்த வார்த்தைகளை தூக்குமேடையில் இருந்து கொண்டு கூடச்சொல்லுவதற்குதயாராயிருப்பதாகவும் இவ் வார்த்தைகளை இந்தக் கூட்டத்தில் சொன்னதோடு தாம் நிற்கப்போவதில்லை என்றும், இதே அபிப்பிராயத்தை நாடு முழுதும் பரப்ப பிரசாரம் செய்யப்போவதாகவும் சொல்லி உட்கார்ந்தார். (அதே மாதிரி பிரசாரம் செய்தார்) இப்படி சொன்ன பிறகு தான் திரு. சீனிவாசய்யங்கார் தன்னை "தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைமை ஸ்தானத்திற்கு தேர்ந்தெடுத்ததை ஒப்புக்கொண்டதாக திரு. நாயக்கர் தமது வாக்கால் சொல்ல வேண்டும்" என்று சொன்னதோடு திரு நாயக்கரும் நிர்வாக அங்கத்தினராக தெரிந்தெடுக்கப்பட்டனர். இவைகள் அப்போதைய 'இந்து' 'சுதேசமித்திரன்' முதலிய பார்ப்பனப்பத்திரிகைகளில் காணலாம்.

ஒரு சரித்திரக்காரன்.

செனெட் சபைத் தேர்தல். திருச்சி.

3-12-28ல் திருச்சியில் நடைபெற்ற செனேட்சபைத் தேர்தலில் ஜனாப் கபிபுல்லா அவர்கள் தம்பியும் ஜனாப் பிச்சை ராவுத்தர் அவர்கள் குமாரருமான ஜனாப் ஷர்புடீன் அவர்கள் அதிகவோட்டுகளால்மேற்படிசபைக்கு ஓர் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1928 ௵ O. S. No. 887.

நாக மூப்பன்:—வாதி

சென்னி மூப்பன் 1, சின்னகருப்பமூப்பன் 2, காளி மூப்பன் 3, சாத்தா மூப்பச்சி 4, ரங்க மூப்பன் 5, பழனியப்ப செட்டி 6, கருப்ப கவுண்டன் 7, சொப்பு என்று அழைக்கிற பழனியப்ப செட்டி 8 பிரதிவாதிகள்.

மேற்படி நெம்பர் வாதிக்கு 1, 2, 3 பிரதிவாதிகள் 29—5—21ல் எழுதிக்கொடுத்திருக்கும் அடமான பத்திரப்படி ரூ. 1872-10-0ம் பின் வட்டியும் செலவும் கிடைக்கவேணுமாய் தாவாதொடரப்பட்டுமேற்படி நெம்பர்விசாரணைக்காக 15—12—28ல் வாய்தா போடப்பட்டிருப்பதால் மேற்படி தேதியில் 2, 3, 7, 8 பிரதிவாதிகள் தங்களுக்குள்ள எதிர்வாதத்தை தெரிவித்துக்கொள்ளாவிட்டால் மேற்படி நெம்பர் ஒரு கக்ஷியாய் முடிவுசெய்யப்படும்.

ஈரோடு, 5-12-28 } E. S. தெண்டபாணி அய்யர்,
வாதி வக்கீல்.

வெள்ளி நகைகள்.

சுத்தமான வெள்ளி! நேர்த்தியான வேலை!

நம்மிடம் அரைஞாண், முடிச்சுகுத்திக்கொடி, முகப்பு போட்ட கொடி, சாதா செயின் கொலுசு, முத்துசெயின் கொலுசு, டைமண்ட்பட்டை செதுக்கிய செயின் கொலுசு, புதுச்சேரி கொலுசு, மாங்காய் பட்டை கொலுசு, கடகம், கால் தண்டை, மயிர் மாட்டி, அருப்பு சங்கிலி, சாவி கொத்து, போல் காப்பு, சலங்கை, இன்னும் பலவித வெள்ளி நகைகளும், கடுக்கன், கம்மல், தோடு, மூக்குத்தி, மோதிரம் முதலிய கல் நகைகளும் தயாராகி வியாபாரிகளுக்கு மொத்தமாயும் விலை சரசமாயும் அனுப்பப்படுகின்றன. ஒரு முறை ஆர்டர்செய்து பாருங்கள். மற்ற விபரங்களுக்கு லெட்டர் எழுதுக.

B. N. கெங்காராமய்யர்,

நகை வியாபாரம், செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. India.)

ஆதியே துணை.

இனும்! இனும்!! இனும்!!!

1929–௵த்திய அழகான காலண்டர் தங்களுக்கு தேவையானால் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

A. E. முஹையத்தீன் மெடிக்கல் ஹால்,

வலங்கைமான், தஞ்சை ஜில்லா.

சிறுகுடியில் சுயமரியாதைத் திருமணம்.

நாளது விபவ வருஷம் கார்த்திகை மாதம் 7ந்தேதி வியாழக்கிழமை மதுரை ஜில்லா மேலூர்தாலூகாசிறுகுடியில் திருமுத்துராம பிள்ளை குமாரி திருமதி ராமாயி அம்மாளுக்கும் கட்டுக்குடிப்பட்டி அழகப்ப பிள்ளை குமாரர் திருவாளர் சின்னையா பிள்ளைக்கும் இம்மதி ஏழாம்தேதிசுயமரியாதைத்தொண்டர் திருவாளர் அருணாசலம் பிள்ளையவர்களை திருமணம் நடத்தி வைக்கும்படி கேட்டுக் கொண்டபடி அவர் எழுந்துசபையோர்களை நோக்கி பார்ப்பனர்கள் தங்கட்குச் சாதகமானவற்றை முனிவர்கள் வாக்கென்றும் கடவுளால் மக்கட்கு செய்யப்பட்டதென்றும் கூறி, புராணங்களென்றும் இதிகாசங்களென்றும் பல பெயரிட்டு அச்சிட்டு எழுதிவைத்திருக்கும் புரட்டுத்தனத்தையும் யோக்கியமற்ற கட்டுக்கதையையும் யாவர்க்கும் புலனாகும்படி வெளியாக்கி நம் தாய்நாட்டிற்கு புது உணர்ச்சியை ஈந்து மூடநம்பிக்கையையும் வைதீகப் பேயையும் புரோகிதச் சனியனையும் நாட்டை விட்டுத் துரத்தும்படிக்கும் பார்ப்பனப் புரோகிதத்தின் மோசத்தனத்தையும் அம்மாய வலையில் சிக்கியிருக்கும் மக்களுக்கு எடுத்துச்சொல்லி, இனிமேல் கலியாணமமுதல் மற்ற சடங்குகள் யாவும் சுயமரியாதையாக நடத்த வேணுமென்றும் சாம்பல் பூச்சையும் ருத்ராட்ச கொட்டைகளையும் பார்த்து மோசம் போகக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டு மணமகளை "எனது அன்பார்ந்த நாயகா நான் எனது முழுமனதுடன் தங்களை காதலித்து தங்களுடன் உடலும் உயிரும் போல்ஒருமித்து வாழ்ந்து தங்கள் சுக துக்கங்களை எனது சுக துக்கங்களாக பாவித்து தங்களுக்கு பணிவிடை செய்வதில் உண்மையுள்ள பணியாள் போலவும் தங்களைபோஷிப்பதில் தாய் போலவும் தங்களுக்கு யோசனைசொல்வதில் முதல் மந்திரியைப்போலவும் இருந்து தங்களுடன் இல்வாழ்க்கை நடத்துவதாகச் சம்மதித்து இவிடம் சூழ்ந்துள்ள சகல ஜனங்களுமறிய தங்களை என் ஆருயிர்க் காதலராக ஏற்றுக் கொண்டு யிந்த மணமாலையை தங்களுக்குச் சூட்டுகிறேன்" என்று சொல்லச்செய்து, மணமகனை "எனது ஆருயிர்நாயகி நான் என் முழுமனதுடன் உன்னை காதலித்து உன் நலங்கருதுவதிலும் உன்னைபோஷிப்பதிலும் உண்மையுள்ள சிநேகனைப் போலிருந்து உன்னுடன் இல்வாழ்க்கை நடத்துவதாகச் சம்மதித்து இவிடம் சூழ்ந்துள்ள சகல ஜனங்களுமறிய உன்னை எனது அருமை மனைவியாக ஏற்றுக் கொண்டு இந்த மண மாலையையும் திருமாங்கல்யத்தையும் நான் உனக்குச் சூட்டுகிறேன்". என்று சொல்லச் செய்து திருமாங்கல்யம் சூட்டுவித்து திருமணத்தைமுடித்தார் திருஈ. வெ. ராமசாமிநாயக்கருக்கு ஜே ஜே ஜே எனச் சொல்ல அம்முழக்கத்துடன் மணம் நடந்தது. அன்பர் அருணாசலம் பிள்ளை அவர் நீடூழி வாழ்க.

ஒரு நிருபர்

பெரிய இடத்துக்கல்யாணங்கள்,

சென்னிமலை.

சென்னிமலை திரு. வி. எஸ். செங்கோட்டய்யா பிரதர்ஸ் அவர்கள் குடும்பத்தில் அவர் தமயனார் திரு முருகேசமுதலியார் அவர்கள் குமார்த்திக்கும் சித்தோடு திரு மாரியப்ப முதலியாருக்கும் 19—11—28 தேதி காலையில் வெகு விமரிசையாக திருமணம் நடந்தேறியது. திருவீழிமீழலை சகோதரர்கள் நாகஸ்வரக்கச்சேரியும் மைசூர் வித்வான் வீணைக்கச்சேரியும் ஆடம்பரமான ஊர் கோலமும் நடந்தது. ஜில்லா பிரமுகர்கள் எல்லோரும் விஜயம் செய்திருந்தார்கள். ஆனாலும் பார்ப்பனீயமே அங்கு தாண்டவமாடிற்று என்பதை மாத்திரம் மறைப்பதில் பிரயோஜனமில்லை. மணமகன் திரு மாரியப்பமுதலியார் ஒரு சுயமரியாதை வீரராயிருந்தும் பெரியவர்கள் என்பவர்களின் நிர்பந்தத்தைதவிர்க்கமுடியாமல்போய் விட்டதால் பார்ப்பனீயத்தை ஒழிக்க முடியாமல் வெகு கஷ்டத்துடன் திருமணம் நடத்திக்கொண்டார். பெண் வீட்டார்களும் எல்லா விபரமும் தெரிந்த பெரியவர்களாயிருந்தும் பார்ப்பனதாக்ஷண்யத்தால் பார்ப்பனீயத்தை ஒழிக்கத்தக்க தைரியமில்லாமல் போய் விட்டது. என்றாலும் பார்ப்பனீயத்தை அறவே ஒழிக்கத்தக்க துணிவு சீக்கிரத்திலேற்பட்டுவிடுமென்றே நம்புகிறேன்

கோபிதாலூக்கா கோங்கர்பாளையம்

கோபி தாலூக்கா போர்டு பிரசிடெண்டாயிருந்த கொங்கர்பாளையம்திரு கே என். நஞ்சப்பகவுண்டர் (ராஜூ கவுண்டர்) அவர்கள் இளைய குமாருக்கு 25-12-28 தேதி ஞாயிற்றுக்கிழமை பார்ப்பனீய சடங்கு ஒழிந்த சுயமரியாதைத்திருமணம் நடந்தது. இந்த ஜில்லாவில் பெரிய வீட்டுக்கல்யாணங்களில் இதுவேமுதன்மையானசுயமரியாதைத்திருமணமாகும். மற்றும் பலஇடங்களில் நடந்ததாகச் சொன்னாலும் அவைகள் பார்ப்பனப் புரோகிதத்தை மாத்திரம் ஒழித்திருப்பார்களே ஒழிய பார்ப்பனீயத்தை ஒழித்திருக்க மாட்டார்கள், ஏனெனில் பார்ப்பனப்புரோகிதனுக்கு பதிலாக பார்ப்பனரல்லாதாருக்கு பூணூல் போட்டு அர்த்தமற்றபார்ப்பனீய சடங்குகளை அர்த்தம்தெரியாத பாஷையில் நடத்திபெண்ணும் மாப்பிள்ளையும் பெற்றோரும் அவர் காலில் விழுவதைதடுப்பதில்லை ஆனால்இந்த மணம் அப்படிகொன்றுமில்லா அவர்கள் குடும்பத்தைச்சேர்ந்த ஒரு பெரியார்ஆசிர்வதித்து திருமாங்கல்யம் எடுத்து மணமகள்கையில் கொடுக்க திருமாங்கல்யம் மணமகனால் சூட்டப்பெற்று மணம் முடிக்கப்பட்டது. செலவும் வெகு சுருக்கமாகவே முடிக்கப்பட்டது.இதற்கு முன் சமீபகாலத்தில இதே வீட்டில் இந்த மாப்பிள்ளையின் தமயனார் திரு பொன்னம்பலம் அவர்களின் திருமணத்திற்கு இருபது முப்பதாயிரம் ரூபாய் வரை செலவு செய்யப்பட்டது. அதில் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் தக்ஷிணை கொடுத்தது சுமார் இரண்டு மூன்று ஆயிரம் ரூபாய் இருக்கும். சாப்பாடு போட்டது ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் இருக்கும் தாசி வேசிகளுக்கு கொடுத்ததும் இது போலவே இருக்கும். இந்த கல்யாணத்தில் பார்ப்பன தக்ஷிணை என்கின்ற ஒரு தனிச் சடங்கேகிடையாது. தாசி வேசி முதலியவைகளும்கிடையா. மற்றபடி ஜில்லா பிரமுகர்களும் அதிகாரிகளுமஎல்லோரும்வந்திருந்தார்கள். திருமணத்திற்குதிருவாளர்கள்ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களும் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் கைவல்ய சுவாமிகளும் வந்திருந்தார்கள். முகூர்த்தம் என்பது 10 மணிக்கு நடத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் திரு. நாயக்கரும் கண்ணப்பரும் வந்த பிறகு அதாவது 12. 30 மணிக்கே நடத்தப்பட்டது.

இவ்வளவு தைரியமாக பார்ப்பனீயத்தை ஒழித்து ஜில்லாவாசிகளுக்கு வழிகாட்டிய பெருமை திரு ராஜூக்கவுண்டர் அவர்களுக்கே உரித்தானது என்றாலும் அவரது மூத்த குமாரர் திரு. பொன்னம்பலம் அவர்களே இதற்கு காரணமானவர் என்பதையும் குறிப்பிடாமலிருக்க முடியாது.

மதுரை ஜில்லா ஆண்டிப்பட்டி:

ஆண்டிப்பண்டிப்பட்டி திரு பெ. க நாச்சியப்ப நாடார் அவர்கள் குமாரத்திக்கும் ப. ச. ராமசாமி நாடார் குமாரர் திரு. மாரிமுத்துக்கும் 23—11—28 தேதி வெள்ளிக்கிழமை பார்ப்பனப் புரோகிதம் பார்ப்பனீயம் என்பவைகளே ஒரு சிறிது மில்லாமல் சுத்த சுயமரியாதை முறையில் திருமணம் நடந்தேறியது என்றேசொல்லவேண்டும். தவிர ஒருமாதத்திற்குமுன்பிருந்தே கல்யாணத்தை திரு நாயக்கரும் கண்ணப்பரும் வர சவுகரியப்படும் தேதியில் நடத்துவதாக ஏற்படுத்தப்பட்டிருந்தபடி அவர்கள் விருதுநகரிலிருந்தும் சென்னையிலிருந்தும் 23-11-28 காலை 11 மணிக்கு ஆண்டிப்பட்டிக்கு வந்து சேர்ந்ததும் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக இவர்கள் வரவேற்பதற்கு என்று ஏற்படுத்தியிருந்தமண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டு பட்டி வீரம்பட்டி திரு. பி நடராஜ நாடார் அவர்களால் வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டு முடிந்தஉடன் மணமக்கள் அந்த மண்டபத்திற்கே வரவழைக்கப்பட்டு எவ்வித அர்த்தமற்ற சடங்கும் இல்லாமல் அங்கேயே திருமணம் நடத்தப்பட்டது- அதுசமயம் திரு நாயக்கரும் கண்ணப்பரும் முறையே திருமணம்என்பது பற்றியும் மூடப் பழக்கங்கள் என்பது பற்றியும் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவ்வூர் பார்ப்பனர்கள்கொடுமைக்கு பயந்து உள்ளூர் நாடார்கள் சிலர் திரு மணத்திற்கு வராவிட்டாலும் டாக்டர் முதலிய அதிகாரிகளும் சுற்றுப்பக்கங்களிலிருந்து ஆயிரக்கணக்கானவாலிபர்களும் ஏராளமாய் வந்துகுழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது.

தென் இந்திய ஆதித்திராவிட வைதீக மகாஜன சபை.

பம்பாய் கிளை ஆதாவின்கீழ்பம்பாய், தாதராவில் ஆதிதிராவிட முதலாவது சமூக மகாநாடு நாளது ௵ டிசம்பர் ௴ 12௳ மாலை கொளும்புதாய்சமாஜத்தின் கௌரவ காரியதரிசி ஸ்ரீமான் படுதலை தங்கவேல் அவர்கள் அக்கிராசனத்தில் நடைபெறும். எஸ். பி. சந்தானராஜூ, கௌரவ காரியதரிசி.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சுயமரியாதைக்கு 'தமிழ்நாடு'வின் எதிர்ப்பிரசாரம்

நிலைமை இத்தகையதாக, "தமிழ் நாடு"வில் மதியற்ற பொறுப்பற்ற பிரசுரம் வெளியுலவியது மிகவும் ஆக்ஷேபிக்கத்தக்கது. உண்மையாகவே இத்தகைய பிரசாரங்களினால் நாடார்களின் சமூகத்தைக் கலைத்து, திரு. நாயக்கர் அவர்கள்பாலும் சுயமரியாதை இயக்கத்தின்பாலும் வெறுப்பை விளைக்கச் சூழ்ச்சிசெய்வது ஒருக்காலும் பலனடையாது. சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்ட நாடார்கள் சமூகத்தினது அன்பும் அபிமானமும் எட்டுணையும் குன்றவேதன்று: குன்றுமோ என்று ஐயுறவும் இடமில்லை. நாடார்கள் சமூகத்தினரில் சுயமரியாதைச் சார்பு எக்காலத்தும் அசையாததாகுமென்று கூறுவோம்.

இறுதியாக இது சம்பந்தமாய் "தமிழ்நாடு"வின் பிரசுரம் அற்பத்தன்மையான பொய் என்றும் உண்மைவிஷயம் 'திராவிட'னிலும் 'குடி அரசிலும்' பிரசுரிக்கப் பெற்றிருக்கிறதென்றும் "தமிழ்நாடு"வை நம்பவே வேண்டாமென்றும் அதனை ஒருபுறமாக ஒதுக்கித் தள்ளவேண்டுமென்றும் பொது ஜனங்களை விருதுநகர் வாசிகள் மிகவும் கேட்டுக்கொள்கின்றனர் என்று ஒரு நாடார் பிரமுகர் தந்தி மூலம் அறிவிக்கின்றார். 'திராவிடன்'

பப்போலி ஸ்ரத்தானந்த வித்யாலயத்தின் வேண்டுகோள்.

தீண்டக்கூடாதென்றும் பார்க்கக்கூடாதென்றும் நம்நாட்டு சகோதரர்களில் ஓர்சாராரை எதுவரை தாழ்த்தி வைக்கிறோமோ அதுவரை நாம் நமக்கு சுதந்தரம் வேண்டுமென்றும் சகோதரத் தன்மை காட்டவேண்டுமென்றும் பிறரைக் கேட்க உரிமையில்லை. ஆகையால் நமது முதற்கடமை தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு கல்வி கற்பித்து சமத்துவமாகப் பாவிப்பதேயாகும்.

ஸ்ரத்தானந்த வித்தியாசாலையானது இந்நோக்கத்தோடேயே 1927 ஆம் வருடம் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வித்யாசாலையில், வியாபாரம், விவசாயம், நூற்றல், நெய்தல், தைத்தல், தச்சுவேலை, கொல்லத்துவேலை முதலிய தொழிற்கல்வியும் போதிக்கப்படுகின்றன. ஆசிரியர்களும் மாணவர்களும் ஜாதி வித்தியாசமின்றி ஒன்றாகச் சமைத்து சமபந்தியில் சாப்பிட்டு ஒரே கட்டிடத்தில் வசிக்கிறார்கள். சுகாதாரமும் ஒழுக்கமும் அதி ஜாக்கிரதையாய் பாதுகாக்கப்படுகின்றன. இவ்விதமாக தன்னம்பிக்கை, தன் மதிப்பு, தைரியம், தயாளம், சகோதரத்வம், சமத்வம், சுதந்தர உணர்ச்சி வளர்க்கப்படுகிறது. வயது சென்றவர்களுக்கும் இராப்பள்ளிக்கூடம் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

போதிய நிதியில்லாமையால் வித்யாசாலை தற்காலிகக்கொட்டகையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. வித்யாசாலை, தொழிற்சாலை போஜனசாலை முதலியன கட்டுவதற்கு ரூபாய் 75000, வேண்டியிருக்கிறது. இவ்வுத்தம கைங்கர்யத்திற்கு மலேயாநாட்டு இந்தியர்கள் தங்களாலான உதவியெல்லாம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

K. கேலப்பன், மானேஜர்

குறிப்பு:—இது மிகவும் நல்ல காரியமாகையாலும் திரு. கேலப்பன் அவர்கள் உண்மைத் தொண்டரானதினாலும் இந்தக்காரியத்திற்கு மலாய் நாட்டுத்தமிழ் மக்கள் உதவிசெய்ய விரும்புகிறோம். (ப-ர்)

அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பரிசும் பெற்ற நல்ல மருந்துகள்.

[ரூ. 1-8-0] அமிர்தரஸம். (Rs. 1-8-0)

சகல நோய்களுக்கும் கைகண்ட ஔஷதம்.

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு அரசராயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும்தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி அன்றாடம் கிரமமாய்மலப்பிரவர்த்திசெய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் பெரிய கேட்லாக்கில் பார்க்கவும். 24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்தமாத்திரை உயர்ந்த அபரஞ்சித தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்யப்பட்டது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியையும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0 50 மாத்திரை ரூ. 8—8—0. 25 மாத்திரை ரூ. 5—0—0. வி. பி. வேறு.

சகல மருந்துகளின் விபரமும், நோய்களின் தன்மையும், சாப்பிடும் முறை, பத்தியம், அனுபான அனுபானம் முதலியவைகளும், குணமானவர்களிற் பலரின் உயர்ந்த நற்சாக்ஷி பத்திரங்களும் அச்சிடப்பட்ட நமது பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

நமது வெளியூர் சோல் ஏஜண்டுகள்

1. பர்மாவிற்கு:— மு. ச. வடிவேல பிள்ளை, காந்தி கதர் நிலயம்,
   மொகல் வீதி, ரங்கூன்.
2. தஞ்சைக்கு.— எம். கல்யாணசுந்தர முதலியார், கதர் ஸ்டோர்,
   கடைத்தெரு, மாயவரம்.
3. திருச்சிக்கு—: கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை, புகையிலை மண்டி,
   54 தஞ்சை ரோடு, திருச்சி.
4. மதுரைக்கு:— வி. முத்துராமலிங்கம் பிள்ளை, கோவில்தெரு, திண்டுக்கல்.
5. தென் ஆற்காட்டிற்கு:—வி கே. எஸ். அய்யர். & கம்பெனி,
   சிவபுரி புகையிலை வியாபாரம், கீழ வீதி, சிதம்பரம்.

இதர வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

தண்டபாணி வைத்தியசாலை,
292, சைனாபஜார், மதராஸ்

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

Mysteries of Wedded Life.,

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.

எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்

வாஸன் புஸ்தகசாலை, 244, தங்கசாலைவீதி. சென்னை.

வாஸன் புஸ்தகசாலை, 244, தங்கசாலை வீதி, சென்னை.

அறிவு என்று அடிமைப்பட்டதோ அன்றே உடலும் அடிமைப்பட்டு விட்டது.

(௫-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருக்கும். நாடார்களுடைய சுயமரியாதைக்குப் பங்கமாக திரு. நாயக்கரல்ல, வேறெந்த மூர்த்திகளானாலும் பேசுவதை உண்மையான நாடார் ஒருவரும் பார்த்திருக்கமாட்டார்கள் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. தாழ்ந்தது, தாழ்த்தப்பட்டது என்பதற்கு அர்த்தம்தெரியாமல் திரு. நாயக்கர் வார்த்தையைக் குறைகூறுவது பொருத்தமுடைத்தன்று. மக்கட் பிறவியிலேயே உயர்வு தாழ்வு உண்டென்பது வர்ணாச்சிரம தர்மிகளின் கொள்கையாகும். மக்களை உயர்ந்தவர்களாகவும், தாழ்ந்தவர்களாகவும் கடவுளே படைத்தனுப்புகின்றார் என்று அவர்கள் சாஸ்திரமும் எழுதிக்கொண்டு வாதம் நிகழ்த்தி வருகின்றார்கள். திரு. நாயக்கர் வருணாசிரமதர்ம மூடக்கொள்கையுள்ள கூட்டத்தைச் சேர்ந்தவரல்லவென்பது நாம் சொல்லாமலே விளங்கும். அக்கூட்டங்களையும் அக்குட்டைச் சுவடிகளையும் ஒழிக்கவேண்டுமென்பதுதான் அவருடைய கொள்கையுமாகும்.

பிராமணனல்லாத ஒருவன்மிகவும் பரிசுத்தவானாய் அஷ்டாங்கயோக லட்சணமுந்தெரிந்து பன்னீராண்டுகாலமடக்கி கண்ணைமூடி பிராணாபானவாயுவை மூலாதாரத்தின் வழியாய் ஆறாதாரங்களிலும் ஏற்றி குண்டகுண்டலி சக்தியைத் தட்டியெழுப்பி சர்வசக்தியைத் தியானித்து ஆனந்த நிலையில் அமர்ந்து பிரம்ம நிச்சயத்தை உணர்ந்த பிரம்ம பிரம்மஞானியாகவே இருந்தாலும், அவனுடைய ஆத்மா அடுத்த ஜன்மத்தில் ஒரு பார்ப்பானைப் புணர்ந்து அவனுடைய சுக்கிலமும் சுரோணிதமும் கலந்து கருத்தரித்துப் பெற்றால்தான் பிராமணனாகமுடியுமென்பதுபோல மகாத்மா காந்தி கடைசியாகத் தமிழ்நாட்டிற்கு வந்தபோது சொன்னதை, மகாத்மாவென்றுகூட நினையாமல் திரு. நாயக்கர் பலமாகக் கண்டித்திருந்தார். மகாத்மா காந்தி மக்களை மக்கள் தாழ்வாக நடத்தக்கூடாதென்பதில் மிகவும் அழுத்தமானவராயினும், தீண்டாமை விலக்கின வழியை நன்கு திறந்தவராயினும் வர்ணாசிரம தர்மத்தில் பெரிதும் நம்பிக்கையுடையவராயிருக்கின்றார். வர்ணாசிரம தர்ம நூல்களிலொன்றாகிய பகவத்கீதைக்குப் புத்துயிரும் கொடுத்தார். அவர் தமிழ்நாட்டிற்குக் கடைசியாகச் செய்தவுபதேசத்தை ஆதாரமாகக் கொண்டு பார்ப்பனர்கள் தைரியமாகக் காங்கிரஸ் நடைமுறைகளையும், அரசியல் முறைகளையும் மாற்ற முயற்சித்திருப்பதுடன், கீதையையும் புரட்டியிருக்கிறார்களென்பதையும் சிறிது எழுதுகிறோம். அதாவது:—

அருச்சுனன் கேள்வி—

நல்ல தாய் தகப்பன்களைக் காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமானபிரீதியுள்ள வேதமானது ஜீவன்களுக்கு உயர்ந்தசுகத்தை கொடுப்பதற்காக ஏற்பட்டது, அது கொஞ்சமாயும் நிலையில்லாததான பிரயோஜனங்களைக்கொடுக்கக்கூடிய கர்மங்களை ஏன் சொல்லுகிறது? மேலும் வேதத்தில் சொல்லிய கர்மங்களைச் செய்யவேண்டாமென்று தான்சொல்லலாமோ?

கிருஷ்ணன் விடை:—

உலகத்தில் ஜனங்கள் பலவிதமாயிருக்கிறார்கள், அவர்களிற் சிலரிடம் சத்வமென்கிற குணம் மேலிட்டிருக்கிறது. சிலரிடத்தில் ரஜோ குணமும் சிலரிடத்தில் தமோ குணமும் மேலிட்டிருக்கிறது. சத்வ குணம் மேலிட்டவர்களுக்காக மோட்சத்திற்கு வேண்டிய கர்மங்களை வேதம் எப்படிக்காட்டுகிறதோ அப்படியே ரஜோகுணமும் தமோகுணமும் மேலிட்டவர்களுக்கும் பிடித்த பலன்களை கொடுக்கத்தகுந்த கர்மங்களை வேதம் சொல்லுகிறது. அது அவைகளைச் சொல்லாவிட்டால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய பலன்களை அடைய வழி தெரியாமல் தப்பு வழியில் போய்க் கெட்டுப் போவார்கள்.

இதற்கு ஆசிரியரின் உதாரணமும் முடிவும்.—

கும்பகோணம் முதலான பெரிய ஸ்தலங்களில் கூலி வேலை செய்கிறவர்களுக்காக கள்ளுக்கடைகள் இருக்கவேண்டியது. அப்படியில்லாவிட்டால்-கள்ளு இல்லாவிட்டால்-தாங்க முடியாதவர்கள் கள்ளுக்கடை இருக்கும் ஊர்களுக்குப் போய் கும்பகோணத்தில் போல் தொழில் அகப்படாமல் உத்சவ காலத்தில் ஆராவமுதனைக் கருட வாகனத்தில் எழுந்தருளப் பண்ணுகிற பாக்கியத்தையும் அதினாலுண்டாகும் புண்ணியத்தையும் இழந்து போவார்கள். ஆகையாலே வேதமானது பிரீதியினாலேயே அவரவர்களுக்கு வேண்டியபலன்களுக்கு சாதனங்களைக்காட்டுகிறது.

இது சமீபத்தில் திரு வி கே ராமாநுஜம் அவர்களால் தமிழ் நடையில் எழுதி வெளியிடப்பட்டது. இவ்வாசிரியர் மனப்போக்கையும் விஷயார்த்தங்களையும் வாசகர்களே அறிந்துகொள்ளும்படி விட்டு விடுகிறோம்.

மக்கள் பிறப்பிலே தாழ்ந்தவர்கள், தீண்டக்கூடாதவர்கள் என்று கொடுமை செய்யும் கொடிய வழக்கத்தைத் தொலைக்க வேண்டுமென்று கங்கணங்கட்டி வேலை செய்யும் திரு நாயக்கர் நாடார்களைத் தீண்டாதவர்களென்று நாடார்கள் கூட்டத்திலேயே பேசினார் என்று சொல்வது பொய்யேயாகும். திரு நாயக்கர் சொல்லாததைச் சொன்னார் என்று சொல்லிக் குறை கூறுவது அவருக்குத் தமிழ் நாட்டிலும் மற்றும் பல பாகங்களிலும் ஏற்பட்டுவரும் புகழைக்கண்டு பொறாமை கொள்வதாகும்.

திரு சௌந்தரபாண்டிய நாடாரவர்களுக்கு குமாரத்துவ குலத்தார் வாசித்துக்கொடுத்த பத்திரத்தில் 'நாடார்கள் பள்ளியில் எங்கள் பிள்ளைகள் படிக்க வியலாது விலக்கப்பட்டிருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டிருந்ததற்கு திரு நாடார் பதில் சொல்லும்போது பின்வருமாறு குறிப்பிட்டார். அதாவது:—

'மனிதப்பிறவியில் ஜாதி பேதமில்லையென்று நினைக்கும் நான் இவர்கள் குறைகளைக் கண்டு மிகவும் வருந்தப்படுகிறேன். நாடார்களின் தாராளமான பொருட் செலவால் கட்டப்பட்டிருக்கும் இந்தப்பள்ளிக் கூடத்தில் கூட அவர்களுக்கு உரிமை இல்லையென்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. நாடார்களாகிய நாம் பிறரால் தாழ்த்தப்பட்டிருக்கிறோமென்றும் நமக்குச் சுதந்திரமளிக்க வேண்டுமென்றும் கூறிவரும் இக்காலத்தில் நமக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு சுதந்திரமளியாதிருப்பது வருந்தத்தக்கதே'

என்று திரு நாடார் உபயோகித்தபதத்தைத் தான் திரு நாயக்கரும் உபயோகித்திருக்கிறார். இதற்காக திரு நாயக்கரைக் குறை கூறுவது ஏன்!

பொதுவாக தேசத்திலுள்ள பல்லோர் பழக்க வழக்கங்களாலும் ஏட்டுக் கட்டுப்பாட்டினாலும் மனிதரை மனிதர் தாழ்த்தியும் விலக்கியும் ஒடுக்கியும் கொடுமைப்படுத்தியும் வருகிற முட்டாள் தனத்தை நீக்குவதற்காகவே திரு நாயக்கர் தக்க மருந்துகளைக்கொடுத்து வருகிறார். அம்மருந்து கசக்குதென்றால் திரு நாயக்கரென்செய்வார்? நோய்கண்டு வைத்தியன் கொடுக்கும் மருந்து கசக்குதென்று வாளாவிருந்தால் பழக்கமெனும் பாழுங்கிணற்றில் அமிழ்ந்து சாகவேண்டியதுதான் ஆகவே, திரு நாயக்கர் மீது குறை கூறும் நண்பர் நாம் மேற்கூறியவைகளையெல்லாம் சமூகமாய்க் கவனித்துத் திரு நாயக்கர் நாடார்களைத் தாழ்ந்தவர்களென்று சொல்லவில்லையென்பதை உணர்வார்களாக-நாடார்கள் தாழ்ந்தவர்களல்லர். நாயக்கர் மீது குற்றமில்லை.

"குடி அரசு" வாழ்க

எழுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அந்தணர் புரட்டு மாகமப் புரட்டு
மரியவே தத்தினுட் புரட்டும்
புந்தினுக் கொவ்வாப் புளுகிய புராணப்
புரட்டுடன் சுத்தசோம் பேறித்
தந்திரம் பேசிச் சார்ந்திடு மடத்தின்
றன்மையாம் புரட்டினை யெல்லாம்
இந்தநல் லுலக மக்களுக் கியம்பும்
இசை'குடி யரசு'வா ழியவே.

பிக்டோரியல் கம்பெனி,



49 பிராட்வே, சென்னை.

மந்திரவாதிகளின் சூழ்ச்சிகள்

அல்லது

மாயா இரகசியம் வெளியாய்விட்டது!

தற்கால மந்திரவாதிகள், ஜால வித்தைக்காரர்கள் முதலியவர்கள் 'மந்திரம்' என்றும், 'மை' என்றும், 'தேவதை' என்றும், 'பேய்' என்றும், 'பிசாசு' என்றும், பாமர ஜனங்களிடம் பொய் சொல்லி, சகல ஜனங்களும் நம்பும் வண்ணம் செய்து காண்பித்து வரக்கூடிய [Magic] தந்திரஜால வித்தைகளின் சூக்ஷமங்கள் (இரகசியங்கள்) யாவும் மிகவும் எளிய நடையில் எழுதப்பெற்று நமது "நவீன இந்திரஜாலம்" 'சீட்டுக்கட்டு தமாஷ்கள்" என்ற புத்தகங்கள் மூலமாய் இரகசியம் வெளியாய் விட்டது! இப்புத்தகங்களைப் படித்தமாத்திரத்தில் இரகசியங்களைத் தெரிந்துகொண்டு நீங்களும் மந்திரவாதிகளைப்போல் தொழில் செய்து ஏராளமாகப் பணம் சம்பாதிக்கலாம்! அல்லது மந்திரவாதிகளிடம் மயங்காமலிருக்கலாம்!! இன்றே தாங்களும் ஒரு புத்தகத்துக்கு ஆர்டர் செய்யுங்கள்!!!

மந்திரம், ஜாலவேடிக்கை [Magic] கற்றுக்கொள்ள விரும்புவோர்க்கு இன்றியமையாத புத்தகங்கள்!

(1)	"நவீன இந்திரஜாலம்" புத்தகம்	1-க்கு	ரூ.	5—0—0
(2)	"சீட்டுக்கட்டுத் தமாஷ்கள்"	ஷை	ரூ.	2—0—0
(3)	ஷை இரண்டாம்பாகம்	ஷை	ரூ.	2—0—0

(பாக்கிங் & வி. பி. சார்ஜ் வேறு.)

நல்ல லாபம்! ரூபாய் 8-0-0 முன்பணமாக மணிபார்டர் செய்து அனுப்புவோருக்கு மேற்கண்ட 3 புத்தகங்களும் மறுதபாலில் ரிஜிஸ்தர்செய்து அனுப்பக்கூடும். இம்மாதிரிப் புத்தகம் இதுவரை தமிழில் வெளிவரவில்லை என்பது திண்ணம்! ஏராளமான ஆர்டர்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பிரதிதினமும் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. சொற்ப காப்பிகள்தான் கைவசமிருக்கின்றன. ஆர்டருக்கு முந்துங்கள்! பிறகு புத்தகம் கிடைக்கவில்லையே என்று வருந்தாதீர்கள்!!

மானேஜர்:— இண்டியன் மேஜிக் கம்பெனி,

(டிபார்ட் 6) சிவகெங்கை, S. இந்தியா.

80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.

காரம், மணம், நிறம், வாடை, குணம் அமைந்துள்ளது எங்கள் உலகடிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்

(V. 120) ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி லிமிடெட்,

போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்ரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு

ஜினன் வாட்சு கம்பெனி

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு உழைத்துவரும் ஒரு வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர்:— திரு. கா. சுப்பண்ணாச்சாரி

இதன் வருட சந்தா ரூ 3—0—0

வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,

'விஸ்வநேசன்' காரியாலயம், ஈரோடு.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்து 'தில்லைவாழ் அந்தணர்களின் அடியாருக்கும் அடியேன்' என்று எழுதிக் கொடுத்த சீட்டை மட்டும் நம்பின தெப்படி? அந்த சீட்டாவது பாதி செல்லரித்துப்போயிற்று சங்கரர் சொன்ன பாட்டு ஐந்தும் பின்னப்படாமல் அப்படியே இருக்கிறது. தீக்ஷதர்களைவிட ஆதிசங்கரரும் நடராஜரைவிட விஸ்வநாதரும் பெரியவரன்றோ? அவர்களுக்கு யாதொரு தொழிலும் சொத்துமில்லாமல் வயிற்றுப்பிழப்பை உண்டாக்கிக் கொடுத்தவர்கள்யார்? நம்பியாண்டார் நம்பிக்குப்பிள்ளையார் சொன்னதுமட்டும் புத்திக்குப்பட்டு காசி விஸ்வநாதர் சங்கரருக்குச்சொன்னது கருத்திற்குப்படாமல் போனது ஞாயமா? கடவுள் பாப்பானாகவந்துசொன்னால் தானாஒப்பு? கடவுள் வேஷமெடுத்து வந்தபாப்பானுக்குப் பெண்ஜாதியைக்கொடுத்து பக்தியைச்செலுத்தவேண்டுமென்று நாம் நினைக்கும படிப்பும் கடவுள் பறையனாகவந்து தீண்டாமை இல்லை என்று சொன்னதை நம்பாமலிருக்கவும் நம் புத்திக்குக்கிடைத்த காரணமென்ன?

கடவுள் பாப்பானாகவே வரவேண்டும், பறையனாக வரப்படாதென்று நினைக்கிறீர்களா? கடவுளுக்குப் பார்ப்பார வேஷந்தவிர மற்றவேஷ மெடுக்கத்தெரியாதா? மீனும் ஆமையும் பன்றியுமாக கடவுள் எடுத்த வேஷத்தை நாம் படித்ததில்லையா? நம் சிவனுக்கு மூதற்பிள்ளையான எமதர்மராஜா பறையனாகவந்ததும், நமது ராமருடைய தகப்பன் தசரதரின் இருபதாவது பாட்டன் அரிச்சந்திர மகாராஜா அவனுக்கும் அடியில் பறையனானதும், அதற்குசாக்ஷியாக வதிஷ்டர் முதலிய ரிஷிகள் வந்ததும், இதிகாசத்தின் வாலல்லவா? பிர்மாவின் முகத்திலும் காலிலும் நம்மைப்போல் பிறக்காமல் சரியான வழியில் பிறந்தவர் சாம்புவன். அவருக்குப்பாட்டன் விஷ்ணு திருவிக்கிரம அவதாரமெடுத்து சம்பாதித்தது தான் இந்த உலகமெல்லாம் .வார்சு பாத்யதைப்படி சாம்புவனிடம் பறைசாற்றச் சொன்னார். சரியான இடத்திலிருந்து பிறந்தவனானதினால் பாட்டனாக விஷ்ணுவின் விஸ்வ ரூபத்தோடு சரி சமமாய் எட்டுத்தரம் உலகத்தையெல்லாம் சுற்றி பறைசாற்றினார். அப்பொழுது சிறஞ்சீவியும் பறைசாற்றும் தொழிலும் கொடுக்கப்பட்டது. அது முதற்கொண்டே அவரும் அவர் வம்சமும் பறைசாற்றுகிறவர்களும் அவர்கள் குழந்தை குட்டிகளும் பறையரானார்கள். வீரமும் விஸ்வாசமும் உடையஜாதிஎன்று இன்றும் நாம்சொல்லுகிறோம்.

இப்பொழுதும் ராஜாங்கத்தின் உத்தரவுகளை வீரர்களின் முதன்மையான சேனாதிபதிகளேபிரசரிக்க உரிமை பெற்றிருக்கிறார்கள். சாம்புவான் வாலியிடம் சேனாதிபதியாக அமர்ந்தார். இலங்கைக்கு அனுமான் போகையில் இரகசியத்தையும் சொல்லி ராமருக்கு உதவியும் செய்தார். ராமரும் தம்பி லெட்சுமனரும் அவர் சைன்யமும் பிர்மாஸ்திரத்தால் மயங்கிக்கிடந்தபோது சாம்புவானின் உதவியால் உயிர்பெற்று ஊர்வந்து எப்படிசேர்ந்தார்களோ அதுபோல அன்னியருடைய மாயா அஸ்திரத்தால் மயங்கிக்கிடக்கும் நம்நாட்டையும் அநேககாலமாக அடியும் உதையும் பட்டுக்கிடக்கும் நமது செய்வங்களையும் அவரவர்கள் இடத்திலேயே வைக்கவேண்டுமானால் சாம்புவன் வம்சத்தவர்கள் நன்றாக வாழ்ந்தாலொழிய-வாழவைத்தாலல்லாமல்-சிறுத்தொண்ட நாயனாரைப்போல தினமொரு பிள்ளையை அறுத்து சமைத்தாலும், இயற்பகை நாயனாரைப்போல் தினமொருபெண் கொடுத்தாலும், மானக்கஞ்சாற நாயனாரைப்போல் வீட்டிலுள்ள எல்லாப்பெண்கள் தலைமயிரை அறுத்தாலும் இத்தோடுகூட சிவபெருமான் ஆடாத கூத்து ஆடித்தாண்டு ஆடினாலும் தீராது.

ராமாவதாரத்தில் அனுமானுக்குக்குருவாய்இருந்துஉதவிசெய்தார். கிருஷ்ணவதாரத்தில் கிருஷ்ணனுக்கு மல்யுத்தம் அநேகருடன் செய்யவேண்டியிருந்தது. கிருஷ்ணனிடம் சாம்புவந்தர் மல்யுத்தஞ்செய்து அவருடைய தோள்வலியை அதிகப்படச்செய்தார். ஒவ்வொரு அவதாரத்திலும் சாம்புவந்தரை நம் கடவுள் துணைகொண்டு நிற்கையில், நாம் அவரது வம்சத்தாரை புறக்கணித்துவிட்டால் எப்போரில் வெற்றியடைவோம்? திருடன் வந்தால் நம் பெரியவயிறும் ஆசார அனுஷ்டானமும் ஓடித்துரத்துமோ? அநேகபோலீஸ் காரருக்கு தலையாரித் தண்டக்காரன்தானே போலீஸ் மெடல்வாங்கிக்கொடுப்பது. விஷ்ணுவின் அம்சம் ராஜாக்கள் என்கிறது நமதுசாஸ்திரம். அதுபோல வெள்ளைக்கார விஷ்ணுக்களும் சாம்பவர்கள் உதவியைத்தானே தாங்கி நிற்கிறார்கள். எப்பொழுதும் அவர்கள் விஷ்ணுபக்தர்கள்; விஷ்ணு அடியார்கள். அந்த வழக்கப்பிரகாரமே அவர்களிடம் வேலைக்கமர்ந்து அவர்கள் அனுபோகிக்கும் சுகங்களுக்குக் காரணமாகி தாங்களும் அச் சுகங்களை அனுபவித்தும் நாம் பார்த்தும் அவர் தயவைக்கேட்டும் வருகிறோம்.

நாம் சிவகோத்திரம் பாப்பார்கள் பிர்மகோத்திரம், வைஷ்ணவர்கள் விஷ்ணுகோத்திரம், இன்னுமனேகம் தேவகோத்திரம் என்று நாமெல்லாம் வழங்கிக்கொள்ளுவதற்கு என்ன ஆதாரமோ அந்த ஆதாரந்தானே சாம்புவன் பிர்மாவின் பிள்ளை என்பதற்கு மிருக்கிறது. நாம் காட்டிலிருந்த காலத்தில் நாட்டிலிருந்தமனிதர்களும் அவர்கள் என்றுதானே ஆதிதிராவிடர்கள் என்று நாமும் ஒத்துக்கொண்டோம். வீரமும் விஸ்வாசமுடைய ஜாதிஎன்பதும் நமக்கு அனுபோகம். அவர்களை விட்டு விட்டதினால்நமக்கும் நம்மதத்திற்கும் வந்த அழிவையும் ஊன்றிப் பார்க்கிறவர்களைக் காணோம். மதம்போச்சு! கடவுள்போச்சு! என்று கத்துகிறவனைப்பற்றி கவலை வேண்டாம். காலுக்குவந்தபுண்ணைக் கழுவாவிட்டால் சீழ் உடலுக்கு மேறும்என்பதை கவனத்தில் வைக்கவும்.

கடவுளுக்கும் சாஸ்திரங்களுக்குமினிய ஸ்வதர்மங்களை மறந்து, தருமத்தையும் நீதியையும் ஒதுக்கி, கௌரவத்தைக் காப்பாற்றவேண்டுமென்கிற எண்ணம் முன்னேநின்றால், உலகமெலாம் ஓங்கி விளங்கும். தெய்வவிதியின் கோபத்தாலே நாம் எத்தனை பெரியபண்டிதனானாலும், பௌதிகசாஸ்திரத்திலும் ராஜ்யசாஸ்திரத்திலும் உயர்வாகத் தோன்றிய போதிலும், அடிமை என்பதின் அர்த்தம் தெரியாமல் போகிறது. (தொடரும்.)

வேலூரில் பார்ப்பனீயத்தின் தோல்வி.

வேலூர் நகரசபையில் பல்லாண்டுகளாக பார்ப்பனீயமே ஆதிக்கம் பெற்று ஆட்சி செலுத்தி வந்தபோதிலும், அது இவ்வருடம் தோல்வியடைந்தது. அது எவ்வளவோ சூழ்ச்சி செய்தும் பலிக்காமல் திரு பத்பனாப முதலியாரே நகரசபைத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டு வெற்றிபெற்றார் திரு முதலியார் நகரத்தின் நலத்தின் பொருட்டே தம்முழுபலத்தை யும்உபயோகிப்பாரென்பது திண்ணம். ஒரு நிருபர்.

ஜீவரசம்.

ஓர் சிறந்த குடும்ப ஔஷதம்.

ஜீவரசம் சகல வியாதிகளையும் குணப்படுத்துவதில் முதன்மை பெற்றது.

ஜீவரசம் குழந்தைகள் முதல் விருத்தாப்பியர் வரை பயமின்றி உபயோகிக்கக் கூடியது. அதற்கு பத்தியம் அனுபானமில்லை.

டாக்டர்கள், உத்தியோகஸ்தர்கள், ஜமீன்தார்கள், எஸ்டேட் துரைமார்கள், வக்கீல்கள், தேசிய தலைவர்கள் உபயோகித்து நன்கு மதித்து நற்சாக்ஷி பத்திரங்கள் தந்துள்ளார்கள்.

ஒரு முறை உபயோகித்துப்பார்த்தால் அதன் உண்மை விளங்கும்.

விலை ரூபாய் 1—8—0. செலவு வேறு.

வியாபாரிகளுக்கு விலை வேறு.

ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதுக

ஜீவரசம் கம்பெனி, (லிமிடெட்)
(2) காரைக்குடி S. I.

முக்கிய வியாபாரிகள்:—

T. N. சொக்கலிங்கம் பிள்ளை அன் சன்ஸ்,
வடக்கு சித்திர வீதி, மதுரை,

M. இஸ்மாயீல் சாஹிப்,
அய்யங்கடை, தஞ்சாவூர்.

பொடி! பொடி!! பொடி!!!

சிறந்த மணமும் உயர்ந்த குணமும் வாய்ந்த நேர்த்தியான,

புகையிலைப் பொடி.

சுமார் ஐம்பது ஆண்டுகளாகப் புகையிலைத்தோட்டம் நன்கு அறிந்தவர்—கைபாகம் வல்லவர்—செய்பாகம் உள்ளபடி உணர்ந்தவர்—

அவர் யார்?

அவர் தாம் பொடியுலகில் ஆதி புருஷராகிய றெட்டேர் ஷண்முக முதலியாரின் அருமைக்குமாரர் றெட்டேர் காசி விஸ்வநாத முதலியார்.

அன்பர்களே! அபிமானிகளே!!

பல போலிப் பொடிகளைப் போட்டு ஏமாறாதீர்கள்!

உலகமெங்கும் புகழ் பெற்ற நமது றெட்டேர் காசிவிஸ்வநாத முதலியாரவர்களால் செய்யப்படும்

உயர்ந்தபொடியினை

ஒரு முறை வாங்கிப்போட்டுப் பாருங்கள். பொன்போல் நிறமளிக்கும். நெய்மணம் வீசும், ஆறு மாதமானாலும் காரம் குறையாது.

விலை வீசை 1-க்கு	ரூ 3—8—0
மதுரை முதல் நம்பர் வீசை ஒன்றுக்கு	ரூ 4—0—0
மதுரை இரண்டாம் நம்பர் வீசை 1 க்கு	ரூ 3—8—0

தபால் சார்ஜு பாக்கிங் சார்ஜு பிரத்தியேகம்.

எமது பொடிக்கு ஏஜன்ஸி வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிக் கொள்ளவும்.

எமது விலாசம்:—

பொடிக்களஞ்சியம்.

மானேஜர் R. காசிவிஸ்வநாத முதலியார்.

தபால் பெட்டி 156, சென்னை.

ஜயமரியாதை பெறவேண்டுமானால் "குடி அரசு" திராவிடன் பத்திரிக்கைகளை வாங்கிவாசியுங்கள்

நீங்கள் நெடு நாட்களாக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

பயாஸ்கோப் மிஷின்



வந்து விட்டது. தினம் இம்மிஷினைக் கொண்டு ரூ. 4 அல்லது 5 சம்பாதித்துக் கொள்ளலாம்.

நூதனமான அமெரிக்கன் பயாஸ்கோப் மிஷின் (படத்தில் காட்டியது போலவே இருக்கும்) இதற்கு, எண்ணெ விளக்கும் இருக்கிறது. இந்த பயாஸ்கோப் மிஷினில் இதில் வரும் பிலிம்கள் ஒன்றை போட்டுக் கொண்டு வந்தால் அழகிய லேடிகளின் நாட்டியங்கள், சர்க்கஸ், குதிரைப் பந்தயங்கள், மோட்டார் ஓடுவது, கப்பல்கள் ஆகாய விமானம் முதலியன யாவும் பெரிய பயாஸ்கோப்புகளில் காணுவதுபோல் இம்மிஷினில் சுலபமாகக் காணக்கூடும். விலை ரூ. 2-8-0 மிஷினுடன் இரண்டு பிலிம் இனாம். பிரத்தியேகம் பிலிம் டஜன் 1-க்கு ரூ. 1—0—0 வி. பி. சார்ஜ் 0—8—0

பீ. ஆர். ரங்கநாதம் அண்டு கம்பெனி,
9, நாகமணி தோட்டத் தெருவு, மதராஸ்.

அநுபவ சிந்தாமணி.

பல அரிய விஷயங்களடங்கிய இந்நூலானது மக்களின் அறிவை விளக்கி பற்பல வித தொழில் செய்யும் முறைகளைக் கற்பித்து அதன் மூலம் மிகுந்த செல்வத்தை சம்பாதிக்கும் மார்க்கங்களை போதிக்கின்றது. தன் ஜீவனத்திற்குப் பிறர் உதவியை எதிர்பாராமல் சுயமாக பணம் சம்பாதிக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் இந்நூல் அவசியமானது. புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 1—0—0

விலாசம்:— தேசநேசன் ஆபீஸ்,
19. தம்புசெட்டி தெரு, மதராஸ்.

விஷக்கணைக்கில் குணம் அடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய். ஆச்சர்யநிவர்த்தி!!

சுவாசகாச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர்.

நீண்டகால சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு, தொண்டை இவைகளில் உண்டாகும் சகலவித கஷ்டங்களையும் நமது ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன், இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசிதீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0. உள்நாட்டுக்கு தபால் செலவு 0—4—0. பு. மா. சோக்கலிங்க முதலியார், புரோப்ரைட்டர்,

திருநாவுக்கரசு வைத்தியசாலை, செவ்வாய்பேட்டை, சேலம். (தென் இந்தியா.)

18 காரட் ரோல்டு கோல்டு ஹாரங்கள்



இவைகள் பரிசுத்தமான ரோல்டுகோல்டில் தயாரித்து இடையிடையே இமிடேஷன் வைரங்கள் பொதியப்பெற்றது. இருதயபதக்கத்துடன் கூடியது.

விலை ரூ. 2—0—0

18 காரட் ரோல்டுகோல்டு மோதிரம்

இமிடேஷன் வைரங்கள். பொதியப்பெற்றது. பார்வைக்கு ரூ 100 மதிப்புடையது. விரல்களுக்கு நல்ல அணிகலம். ஒருமுறை வாங்கியவர்கள் திரும்பவும்வாங்குகிறார்கள். விலை ரூ 1—8—0 உடனே எழுதுங்கள்.

ஜினன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

ஸ்ரீ தேசபந்து பில் போஸ்டிங் கம்பெனி,
வியாபார விளம்பர பிரதிநிதி ஸ்தலம்,
புதுமார்க்கெட், கோயமுத்தூர்.

விலாசம் தேவை.

வாழ்க்கையினபம், காதற் பெருக்கு, பாலசமுதிர்ச்சி, புது ஊக்கம், தேகாரோக்கியம் என்னும் பாக்கியங்களை அடைய விரும்புவோர் விலாசத்தை தெரிவித்தால், "ரகஸ்ய ரத்னம்" என்ற புத்தகத்தை இனாமாயும் தபாற் செலவில்லாமலும் அனுப்புகிறோம்-

அமிர்தம் அண்டு கோ.,
தபாற்பெட்டி 222,
மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

இனாம்! **இனாம்!!**

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனாம்,

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜீனன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. நிஜமாகவே [illegible] இறக்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆபீஸ்,
திரௌபதை அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

யோகாசனங்கள்.

54 ஆசனங்களின் சித்திரங்களடங்கியது. ஆண், பெண், குழந்தை, சாதி, மதம், நிறமன்னியில், ஆசிரியனின் உதவியன்னியில் கற்று காசம், க்ஷயம், வாதம், சாம்முடக்கு வாயாலே, முதலிய எல்லா நோய்களினின்று நீங்கலாம். பதினைபிரக்கணக்காய் சனங்கள் அப்பியாசஞ் செய்து குணமளித்த நூல் எம். ஆர். ஜம்புநாதன் இயற்றிய நூல் ரூ 1.

ரூடன் அண்டு கோ.
14 பள்ளியப்பன் தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

இனாம்! **இனாம்!!** **இனாம்!!!**

135 இங்கிலீஷ் தனித்தனி ரப்பர் எழுத்துகள் இனாம்.

5-வருஷம் உத்தரவாதம்] ராஜா'ஸ் [ரிஜிஸ்டர் செய்தது.

தனித்தனி தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5

இந்தத் தமிழ் எழுத்துகளடங்கியபெட்டிஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்க வேண்டியது.எனெனில்,தங்களுக்குத்தேவையான, விலாசங்கள், முதலியவைகளைத் தாங்களே அடித்துக்கொண்டு கார்டு, கவர், கடிதம் லேபில்கள் முதலியவைகளில் தமிழிலும் இங்கிலீஷிலும் தாங்களே அச்சிட்டுக்கொள்ளலாம்- இச்சப்படத்தில் கண்டபடி அதாவது:—

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

இம்மாதிரி தமிழ் எழுத்துக்களும், தமிழ் எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும், ஸ்பேசுகளும் பூக்களும் உள்பட 450 ரப்பர் எழுத்துகள் அடங்கிய தகரப்பெட்டி 1-ம், இத்துடன் நான்கு வரிகளை அடுக்கக்கூடிய டைப் ஹோல்டர் பிடி 1, மைப்புட்டி 1, பிரஷ் 1, சிரவணம் 1, மை ஊற்றிய ஸெல்ப் இங்கிபாட் 1, ஒரு லைன் டைப் ஹோல்டர் 1, ஆகமொத்தம் சாமான்களும் அடங்கிய தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ. 5 செட் 1-க்கு விலை ரூ 5—8—0 மேல்கண்ட தமிழ் ரப்பர்எழுத்துப்பெட்டி 1 வாங்குபவர்களுக்கு 'குடி அரசு' பத்திரிகையில் கண்டதாக எழுதினால் **A B C D E** இம்மாதிரியான இங்கிலீஷ எழுத்துக்களும் நம்பர்களும் உள்பட 135 தனித்தனி ரப்பர் எழுத்துக்கள் இனாமாக அனுப்பப்படும்- (மேற்படி இங்கிலீஷ் ரப்பர் எழுத்துக்கள் மாத்திரம் வேண்டுமானால் செட் விலை ரூ 1—6—0 வி. பி. தபால் சார்ஜ் வேறு

(V100) எமது விலாசம்:— அ, ராஜு பிள்ளை அண்டு பிரதர்,
இந்தியா ரப்பர் எழுத்துத்தொழிற்சாலை, 54, பஜார்ரோட், சூளை மதராஸ்

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது.பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முகதேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2, உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA

ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி அநேகர் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2}$x$2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும், சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்ச் பீரீஸ், ஜி. டி. மதராஸ்

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.